புதன்பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 147

புதன்கிழமை
22 ஏப்ரல் 2026

சித்திரை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50



இனப்பிரச்சினை விடயத்தில்

## தனித்துச் செயற்படுகிறது தமிழ்த் தேசியப் பேரவை

சி.வீ.கே.சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 22
இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிக்கு இணங்கி விட்டு, தமிழ்த் தேசியப் பேரவையினர் பிறிதொரு முயற்சியையும் ஆரம்பித்துள்ளனர் இவ்வாறு தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்

»15

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையில்

## தமிழ்த் தேசியப் பேரவைக்கு சுமந்திரனால் கடும் நெருக்கடி

கஜேந்திரகுமார் எம்.பி. பதிலடி

யாழ்ப்பாணம், ஏப். 22
தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் முன்னெடுக்கப்படும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், சுமந்திரனின் நெருக்கடிகளால் தமிழ்த் தேசியப் பேரவையினர் புறக்கணிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது இவ்வாறு தமிழ்த் தேசியப் பேரவை

»15

## ஈழத்தமிழ் மக்களிடம் கட்சிகள் மிக அதிகம்!

இந்தியாவுக்கு வந்த கவலை

யாழ்ப்பாணம், ஏப். 22
ஈழத் தமிழர்களிடம் கட்சிகள் அதிகரித்து விட்டன. அதனை ஓரளவுக்கு ஒழுங்குக்கு கொண்டு வாருங்கள் என இந்திய துணைக் குடியரசுத் தலைவர் தன்னிடம் தெரிவித்தார் என்று தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

»15

## இடமாற்றங்கள் நிறுத்தம்; ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 22
வெளிமாவட்டங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், இடமாற்றம் வழங்கப்பட்ட பின்னர், சில காரணங்களைக் குறிப்பிட்டு அந்த இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடமாகாண ஆளுநர்

»15

செம்மணிப் புதைகுழி

# எதிர்வரும் திங்களன்று மூன்றாம்கட்ட அகழ்வு!



நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 22**

**செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

»15

செம்மணிப் புதைகுழியில்

## ஐரோப்பியக் குழுவின் ஆய்வுப்பணி தாமதம்!

யாழ்ப்பாணம், ஏப். 22
செம்மணி மனிதப் புதைகுழியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்த நிலையில், அந்த நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது. செம்மணி மனிதப் புதைகுழியை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்

»14

செம்மணிப் புதைகுழி தொடர்பான

## மரபணுப் பரிசோதனைக்காக அறிக்கை கோரியது மன்று!

யாழ்ப்பாணம், ஏப். 22
செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் மரபணுப் பரிசோதனையை மேற்கொள்வது தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை வழங்குமாறு சட்டமருத்துவ அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்

»15

## வீதியைக் கடந்த நபர் கார் மோதியதால் பலி

பரந்தனில் சோகம்

கிளிநொச்சி, ஏப். 22
வீதியைக் கடந்த முதியவர் ஒருவர் காருடன் மோதுண்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று இரவு நடைபெற்றது.

»15

சட்டவிரோத மீன்பிடி

## கட்டைக்காடு கடற்பரப்பில் நான்கு மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் மின்னொளி பாய்ச்சி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நான்குமீனவர்கள் நேற்று முன்தினம்

»15

## மாணவனை தீண்டியது பாம்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22
பாடசாலை வேளையில் பாம்பு தீண்டிய மாணவன் ஒருவன் பருத்தித்துறை ஆதார மருத்துவ

»14



முச்சந்தி முரளி

"அப்ப லோயர்மார் எடுத்த முயற்சியையும் உவையள் பிசுபிசுக்கச் செய்யப்போயினம் போல"

பொலிஸ் நிலையத்துக்கு அண்மித்த

## வெற்றுக் காணியில் கஞ்சாப்பொதி!



யாழ்ப்பாணம், ஏப். 22
கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு மிக அருகாகவுள்ள வெற்றுக் காணிக்குள் இருந்து கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டுள்ளது.

»15

## ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 22
ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த, பயன்படுத்திய குற்றச்சாட்டுகளில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு

»15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | | |
|---|---|---|
| திகதி | 21.04.2026 | |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4408 | |
| ஆங்கில எழுத்து | F | |
| வெற்றி இலக்கங்கள் | 05 17 33 42 | |
| விசேட எழுத்து | F | |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1475 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 20 28 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0434 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 6 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2514 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 17 21 36 64 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6166 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 3 4 5 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2196 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 11 44 66 17 |
| விசேட எழுத்து | E |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0282 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 21 50 |

# கியூ.ஆர். முறைமையின் மூலமே எரிபொருள் வழங்கல் தொடரும்

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

**உலக சந்தையில் நிலவும் எரிபொருள் விலையேற்றம் மற்றும் விநியோகத் தடைகளுக்கு மத்தியில், நாட்டில் எரிபொருளை முறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கியூ.ஆர் குறியீடு முறைமை காலவரையறையின்றி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

உலக எரிபொருள் போக்குவரத்தில் 20 சதவீதப் பங்களிப்பை வழங்கும் ஹோர்முஸ் நீரிணை பகுதியில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை, உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இதனை எதிர்கொள்ளும் ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவே இலங்கையில் மீண்டும் கியூ.ஆர். முறைமை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா இது குறித்துத் தெரிவிக்கையில்:

உலகளாவிய எரிபொருள் நெருக்கடி இன்னும் முடிவுக்கு வராததால், தற்போதைய கியூ.ஆர். குறியீடு முறையின் கீழேயே விநியோகம் தொடரும். நிலைமையைப் பொறுத்து, வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டில் அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்படும். எரிபொருள் விநியோகத்தை மேலும் நவீனப்படுத்த அரசாங்கம் சில ய திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க, இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 21.04.2026 | |
| தினம் | செவ்வாய்க்கிழமை | |
| வெற்றி வாரம் | 0874 | |
| ஆங்கில எழுத்து | X | |
| வெற்றி இலக்கம் | 0 1 7 2 6 5 | |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3140 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 29 42 65 66 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 04 07 15 36 |
| வெற்றி வாரம் | 5301 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0970 |
| வெற்றி இலக்கம் | 02 09 17 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| கடகம் | |
| வெற்றி இலக்கம் | 20 29 41 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4852 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கம் | 05 28 33 58 |
| வெற்றி வாரம் | 2316 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 21.04.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 16 19 40 74 |
| வெற்றி வாரம் | 2966 |

# ஒரே நாளில் 10 நாய்கள் விசம் வைத்து கொலை

## விசாரணைகள் தீவிரம்


கொழும்பு, ஏப்.22

அநுராதபுரம் கலாவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் 10 நாய்கள் விசம் கொடுத்துக் கொல்லப்பட்ட அதிர்ச்சியூட்டும் சம்பவம் பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அப்பாவி விலங்குகளுக்கு எதிரான இந்த கொடூரமான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத செயலுக்கு எதிராக அவசர சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விலங்கு நலக் கூட்டமைப்பு உறுப்பினர் மிஹிரி சிறிவர்தன வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், பொலிஸார் உத்தியோகபூர்வ விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்ற போதும், நாய்களின் இறப்புக்கான முழுமையான பின்னணியைக் கண்டறிய விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் செயலைக் கடுமையாகக் கண்டித்துள்ள விலங்கு உரிமைக் குழுக்கள், விலங்கு வதைக்கு எதிரான சட்டங்களை மிகக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும், இதற்குப் பொறுப்பானவர்களைத் தாமதமின்றி நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்று பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எஇ)



# டித்வாவால் சேதமடைந்த வீடுகளுக்கு கொடுப்பனவு

வவுனியா, ஏப்.22

வவுனியா மாவட்டத்தில் டித்வா புயலால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு கொடுப்பனவுக்கான காசோலை நேற்று வழங்கப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், முதற்கட்டமாக, 131குடும்பங்களுக்கு தலா 3 இலட்சம் ரூபா கொடுப்பனவுக்கான காசோலை வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட வீடுகளைத் துப்பரவு செய்வதற்கும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஏற்கனவே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ. சரத்சந்திர, வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலர் கே. சுலோஜினி உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் டித்வா புயலால் 7 ஆயிரத்து 614 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 468 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் 14 வீடுகள் முற்றுமுழுதாகவும், 469 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இதில் அதிகளவான பாதிப்புகள் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் பதிவாகியுள்ளது. புயலால் சேதமடைந்த ஒரு வீட்டுக்கு 5 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதுடன், இதற்காக அரசாங்கத்தால் 234 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (வரு)

# நிலக்கரி இறக்குமதி விசாரணை அடுத்தவாரம்

கொழும்பு, ஏப்.22

நிலக்கரி இறக்குமதி மற்றும் மின் உற்பத்தியின்போது ஒழுங்கற்ற அல்லது சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா? என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையில் நிலக்கரி மின்னுற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பமான சந்தர்ப்பத்திலிருந்து கடந்த 16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரசுக்கு சொந்தமான நிலக்கரி தனியார் நிறுவனம் அல்லது அதன் பங்காளிகளினூடாக நிலக்கரி இறக்குமதி செய்தபோதும் மின் உற்பத்தியின்போதும் ஒழுங்கற்ற அல்லது சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா? என்பதை ஆராய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்குவது இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகும். எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் அல்லது சட்டவிரோத செயல்கள் நடைபெறாமல் இருக்க சரியான கண்காணிப்பு அமைப்பை உருவாக்குவது மற்றும் மின்சார உற்பத்தி தொடர்பான தவறுகள் தொடர்பாக அறிக்கையிட்டு, அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஇ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரான் போர் காரணமாக வாரம் 310 கோடி இழப்பு!

கொழும்பு, ஏப்.22

**மத்திய கிழக்கில் தீவிரமடைந்துவரும் போர்ச்சூழல் காரணமாக, இலங்கையின் தேயிலை ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் ஆகியன கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டம் தனது புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் தேயிலைக்கான முக்கியமான சந்தைகளில் ஒன்றாக ஈரான் விளங்குகின்றது. போர் காரணமாக வாராந்தம் சுமார் 10 முதல் 15 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை ரூபாவில் சுமார் 310 கோடி ரூபா வரையிலான ஏற்றுமதி வருமானத்தை இலங்கை இழக்கநேரிடும். ஹோர்மூஸ் நீரிணை மூடப்படுவதாலும், வான்பரப்பு மட்டுப்படுத்தப்படுவதாலும் சரக்குக் கையாளல் சவால்களை எதிர்கொள்ளும்.

இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தில் முக்கியமான பங்கு வகிக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வருமானமும் பாதிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டில் வெளிநாடு சென்ற இலங்கையர்களில் 80.2 சதவீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே சென்றுள்ளனர். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதம் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் மூலம் கிடைக்கிறது. இதில் 2.7 சதவீதம் நேரடியாக மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்தேவருகின்றது. போர் நீடித்தால் இந்தப் பணவரத்துப் பெருமளவில் குறையக்கூடும். இந்தப் பாதிப்புகளால் அதிகம் பாதிக்கப்படப்போகும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருக்கின்றது. மத்திய கிழக்கில் அமைதி திரும்பாவிடில், இலங்கையின் பொருளாதார மீட்சித்திட்டம் மேலும் சவால்களைச் சந்திக்க நேரிடும் - என்றுள்ளது. (ச-இ)

## புத்தாண்டுச் சுற்றிவளைப்பு; 1,289 பேருக்கு வழக்குப்பதிவு

கொழும்பு, ஏப்.22


புத்தாண்டுப் பருவகாலத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 1,289 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 21,796 நிறுவனங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றில் குறைபாடுகள் காணப்பட்ட 1,289 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தச் சோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பியசேனவுக்கு பிணை

கொழும்பு, ஏப்.22

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பியசேன கமகேவை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதித்தது. 2015ஆம் ஆண்டு சந்தேகநபர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராகப் பணியாற்றியபோது, உரிய சட்ட நடைமுறைகளை மீறி காலி மாவட்டத்தைச் சேர்ந்த 134 பேரை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் சிற்றூழியர்களாக நியமித்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார். இந்த வழக்கு மீண்டும் ஒகஸ்ட் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ச-இ)

## தடுப்புக் காவலில் கரன்தெனிய ராஜு



கொழும்பு, ஏப்.22

பாதாள உலகக்குழுவின் தலைவரான சோபனஹந்தி சனத் டி சில்வா என அழைக்கப்படும் 'கரன்தெனிய ராஜு' பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குற்றப்புலனாய்வுத் திணைக்களம், சர்வதேச பொலிஸாரின் ஊடாக விடுத்த கோரிக்கைக்கு அமைய, கடந்த சனிக்கிழமை இரவு அவர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார். நீண்டகால குற்றப் பின்னணியைக் கொண்ட இவர், நாட்டின் தேடப்படும் முக்கியமான குற்றவாளிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவருக்கு எதிராக நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களினால் 15 பிடியாணை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வெளிநாடு செல்வதற்கு 26 தனித்தனி பயணத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## கமல் அமரசிங்கவுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஏப்.22

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். பிலஸ்ஸ நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டபோது சந்தேகநபருக்கு நீதவான் பிணை அனுமதி வழங்கினார். 25,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதித்தும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வாகனம் ஒன்றைப் பதிவு செய்யும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பாக, கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க கைதுசெய்யப்பட்டார். (ச-இ)




## அவங்கள் அப்பிடி, இவங்கள் இப்பிடி!

நெல்லிருக்கிற வயலுக்கதான் புல்லும் இருக்கும். சிலவேளை வயலில புல்லுமண்டிப்போனால் நெல்லையே அமத்திப்போடும். அப்பிடி இஞ்சையும் ஒரு பக்கம் சனத்துக்கு என்ன நல்லத் செய்யலாம் எண்டு கொஞ்சப்பேர் பார்த்துப் பார்த்துச் செய்ய, வேற சிலதுகள் இன்னமும் சின்னப்பிள்ளைத்தனமா காசைக் கரியாக்கிக் கொண்டிருக்குதுகள். நல்லூர்ப் பிரதேச சபை திருநெல்வேலி சிக்னல் சந்தியில சனம் வெயிலுக்க நிண்டு கருவாடாகக் கூடாதெண்டு சாக்குப் படங்கு கட்டினதெல்லோ. எண்டாலும் அந்தப் படங்கு தொய்ஞ்சு விழுகுது அதால இழுத்துக் கட்டோணும், பச்சைக் கலர் சாக்குப் போட்டால் இன்னும் கூலா இருக்கும், படங்கை இன்னும் நீளமாக் கட்டினால் நல்லது எண்டு கனபேர் சில குறையள் சொன்னவை. அதையெல்லாம் கேட்டிட்டு, அவை கேட்டமாதிரி முந்தநாள் இரவிரவா பச்சைக்கலர் சாக்குப் படங்கை, இனிமேல் தொய்யாத அளவுக்கு, நீளமாவும் கட்டியிருக்கு நல்லூர்ப் பிரதேசசபை. அதால உந்த வெயிலுக்குள்ள என்னெண்டு சிக்னலுக்குள்ள நிக்கிறது? எண்ட பயமில்லை. பச்சைப்பசேலெண்ட மரங்களுக்கு கீழ நிக்கிறமாதிரி சுகமா இல்லாட்டியும், ஓரளவுக்கெண்டாலும் வெயிலுக்க இருந்து தப்பமுடியும். எண்டாலும் படங்குகட்டிறது தற்காலிகத் தீர்வுதான். றோட்டுக்கரையளில மரங்களை நட்டு வளர்க்கிறதுதான் உதுக்கு நிரந்தரத் தீர்வா இருக்கும்.

சரி,இப்பிடி சனத்துக்காக அக்கறையோட கொஞ்சப் பெடியளும் பிரதேசசபையும் ஒரு பக்கம் படங்கு கட்டிக் கொண்டிருக்க, இந்தியாவில எலக்சன் கேக்கிற கட்சிக்கு நல்லூரடியில பனர் கட்டி பிரசாரம் பண்ணியிருக்கு இன்னொரு கும்பல். கிட்டத்தட்ட அந்த பனருக்கெ ஐயாயிரம் ரூபா முடிஞ்சிருக்கும். இஞ்ச ஆரும் அந்தக் கட்சிக்கு வோட் போடுவினம் எண்டாலும் , இப்பிடிக் காசைக் கரியாக்கி உவையள் பனரைக் கட்டிறதில ஒரு நியாயம் இருக்கு. ஆனால் எங்கேயோ நடக்கிற எலக்சனுக்கு இஞ்ச பனரைக் கட்டி என்ன பிரியோசனம்? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விருப்பம் இருக்கும். அந்த பனரைக் கட்டினவைக்கு தமிழகத்தில இருக்கிற அந்தக் கட்சியைப் பிடிச்சிருக்கலாம். அப்பிடிப் பிடிச்சிருந்தால் அவையள் ரிக்கெற்றைப் போட்டு தமிழகத்துக்குப் போய், அந்தக் கட்சிக்காக பிரசாரம் பண்ணினால் பிரியோசனமா இருந்திருக்கும். அப்பிடி போக வசதி வாய்ப்புகள் இல்லையெண்டால், தங்கட ஆசையளை, விருப்பங்களை பேஸ்புக்கில எழுதிப்போட்டிருந்தால் கூட அதை தமிழகத்தில இருக்கிறவை ஆரும் பார்த்து அந்தக் கட்சிக்கு வோட் பண்ண வாய்ப்பிருக்கு. ஆனால் தமிழகத்தின்ர காரைக்குடியில எலக்சனில நிக்கிறவருக்கு நல்லூர்க் கடையடியில பனரைக் கட்டி ஆர் வோட் போடப்போயினம்?

இப்பிடித்தான் இன்னும் கொஞ்சப்பேர் வெளிநாட்டுக் காசில அந்தக் கட்சிக்கு வல்வெட்டியில பட்டம் விட்டுப் படங்காட்டினவை. ஆனால் அந்தப் படமும் பப்படமாகிட்டுது. இப்ப நல்லூரில பனர் கட்டி 'சீன்' போட்டிருக்கினம். உந்த பனர் அடிச்ச காசுக்கு நாலு பிள்ளையளுக்கு புத்தகம், கொப்பி வாங்கிக் குடுத்திருந்தாலாவது புண்ணியமாப் போயிருக்கும்.சந்தனம் மிஞ்சி தட இடம் கிடைக்காதவைதான் இப்பிடி எங்கேயோ நடக்கிற எலக்சனுக்கு இஞ்ச பனர் கட்டுவினம் கண்டியோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# எலிக்காய்ச்சல் அபாயம்

கொழும்பு, ஏப்.22

புத்தாண்டு காலங்களில் வயல்வெளிகள் மற்றும் நீர் நிலைகளை அண்டிய பகுதிகளில் நடத்தப்படும் பாரம் பரிய விளையாட்டுகளில் பங்கேற்ற பொதுமக்கள், எலிக்காய்ச்சல் கிருமிகளின் தாக்கத்துக்கு உள்ளாகக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது எனச் சுகா தாரத் துறை எச்சரித்துள்ளது.

பெரும்பாலான புத்தாண்டு நிகழ்வுகள் மற்றும் கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுக்கள் சேற்று நிலங் கள், வயல்வெளிகள் மற்றும் சிறிய குளங்களுக்கு அருகிலேயே நடத்தப்படுகின்றன.

எலிகளின் சிறுநீர் கலந்த நீர் அல்லது சேற்றுடன், உடலில் உள்ள காயங்கள் வழியாக இந்தக் கிருமிகள் நேரடியாக மனித உடலுக்குள் ஊடுருவும் வாய்ப்புள் ளது. கடுமையான காய்ச்சல், தசை வலி, தலைவலி மற்றும் கண்கள் சிவப்படைதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் பொதுமக்கள் உடனடியாக விழிப்புடன் இருக்க வேண்டும். விளையாட்டுக்களில் ஈடுபட்ட பின் னர் இவ்வாறான அறிகுறிகள் தென்படுபவர்கள், சாதாரண காய்ச்சல் என எண்ணி அலட்சியமாக இருக் கக்கூடாது. தாமதிக்காமல் உடனடியாக மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெற வேண்டும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் இதனை எளிதாகக் குணப்படுத்த முடி யும் என்றும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (ச-இ)

ஆளணி பற்றாக்குறையால்

# தெங்கு முக்கோண வலயம் மன்னார் மாவட்டத்தில் பாதிப்பு

கொழும்பு, ஏப்.22

அரசாங்கத்தின் தெங்கு முக்கோ ணத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டமும் உள்வாங்கப்பட் டுள்ள நிலையில், அதைச் செயற் படுத்த உரிய அதிகாரிகள் இல் லாமையால் தென்னை வளர்ப் போர் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட விவசாயக் குழு வின் இவ்வாண்டுக்கான முதலா வது கூட்டம், மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் அண்மையில் மாவட்ட செயலகத் தில் நடைபெற்றது. அதில் மன் னார் மாவட்ட தென்னை வளர்ப் பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் குறித்து விரிவாக ஆரா யப்பட்டது.

தென்னை வளர்ப்புக்காக மன்னா ருக்கு ஒதுக்கப்படும் கடன் வசதி கள் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. இதனால், பயன்படுத் தப்படாத நிதி மீண்டும் திறைசே ரிக்கே திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. திணைக்கள அதி காரிகள் இன்மையால் கிராம மட் டத்தில் உள்ள தென்னை வளர்ப் போர் அமைப்புகள் இயங்குகின் றனவா என்பதே கேள்விக்குறியா கவுள்ளது. தற்போது மாவட்டத் தில் தென்னை மரங்களுக்கு இடையில் ஒருவித நோய் பரவல் காணப்படுகிறது. இதைத் தடுப்ப தற்கான ஆலோசனைகளை வழங்கவோ அல்லது மருந்து தெளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ தொழில்நுட்ப அதிகாரிகள் இன்றிய நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. மாவட்டச் செயலர், தென்னை வளர்ப்போர் எதிர் நோக்கும் சவால்களைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என அதிகாரிக ளுக்கு அறிவுறுத்தினார். (ச-60)

# மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.22

நல்லூர் கைலாசப்பிள்ளையார் ஆலயத்தின் பராபவ வருட மகோற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து காலை மாலை உற்சவங்கள் இடம் பெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறு நாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என அறி விக்கப்பட்டுள்ளது. (க)

# நல்லை ஆதீனத்தின் முதலாவது குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.22

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் முதலாவது குருபூசை இன்று புதன்கிழமை இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று, சுவாமிகளின் உருவச் சிலை திறக்கப்படும். தொடர்ந்து பிரார்த்தனை உரை, சிறப்புரை, வாழ்த்துரைகள் இடம்பெற்று, இந்துஒளி, சிவபூமி ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, ஏப்.22

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக குஷ் ரக போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இந்திய நாட்டுப்பிரஜை ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமி ருந்து ஒரு கிலோகிராம் 68 கிராம் குஷ்ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் 35 வயது டையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

# தேசிய கல்வி நிறுவனத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம்!

கொழும்பு, ஏப்.22

தேசிய கல்வி நிறுவனத்தின் 15ஆவது பணிப்பா ளர் நாயகமாக, முன்னணி கல்விமானும் பொரு ளியல் நிபுணருமான சிரேஷ்ட பேராசிரியர் ஓ.ஜி. தயாரத்ன பண்டா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னதாக, அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியராகப் பணியாற்றி யதுடன், அதே பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். அத் தோடு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் ஆரம்ப பீடாதிபதியாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

கனடாவின் வாட்டர்லூ பல்கலைக்கழகம் உள் ளிட்ட பல சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் கௌரவ ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணி யாற்றியுள்ள அவர், சர்வதேச அங்கீகாரம் பெற்ற பெரும் எண்ணிக்கையிலான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல்களின் ஆசிரியரும் ஆவார். (ச-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்– மனைவிக்கிடையே பரஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக் கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தா லும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டா கும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக் காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் – மனைவிக் கிடையில் பரபஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக் கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும் என்றாலும், மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது**

**பொருள்:** இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அரசியல் துருப்புச்சீட்டல்ல!


இலங்கை வரலாற்றில் கறுப்புப் பக்கங்களாகப் பதியப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்று நேற்றுடன் ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. உயிரிழந்தவர்களுக்கு தேவாலயங்களிலும் பொது இடங்க்ளிலும் மெழுகுவர்த்திகள் ஏந்தி நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக நடைபெற்றாலும், அந்த ஈனச் செயலின் பின்னணியில் உள்ள உண்மைகள் இன்னும் வெளிச்சத்துக்கு வராதமை பெரும் கவலையை அளிக்கிறது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி தேவாலயங்களிலும் நட்சத்திர ஹோட்டல்களிலும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களில் 269 உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அன்று அந்தத் தாக்குதல்கள் ஏற்படுத்திய அதிர்வுகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனங்களில் ஏற்பட்ட ரணங்கள் ஆறாத நிலையில், அவர்களின் ஒரே எதிர்பார்ப்பாக இருப்பது 'உண்மையான சூத்திரதாரிகள் யார்?' என்ற கேள்விக்கான பதில்தான்.

கடந்த ஏழு ஆண்டுகளில் இலங்கையில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தாக்குதல் இடம்பெற்ற காலத்தில் இருந்த அரசாங்கம், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் என அனைத்தும் இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்திருந்தன. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன, சர்வதேசபுலனாய்வு அமைப்புகளின் உதவிகளும் கோரப்பட்டன. ஆனால், இவை அனைத்தும் வெறும் அரசியல் நாடகங்களாகவும், காலத்தைக் கடத்தும் 'பாவ்லா' க்களாகவுமே அமைந்திருந்தன என்பது கசப்பான உண்மையாகும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் வெறும் மதத் தீவிரவாதத்தின் வெளிப்பாடல்ல, மாறாக இது இலங்கையில் ஒரு பெரும் அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு அரசியல் சதியே என்ற பலமான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் நீறுபூத்த நெருப்பாக உள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டும், அவை ஏன் அலட்சியப்படுத்தப்பட்டன? தாக்குதலின் பின்னணியில் இருந்த 'சூத்திரதாரி ' யார்? போன்ற கேள்விகளுக்கு இன்றுவரை தெளிவான பதில்கள் இல்லை. அதிகாரத்தைப் பிடிப்பதற்கான ஒரு கருவியாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், இந்தச் சதியின் பின்னணியில் இருந்தவர்கள் இன்றும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்பது நீதியின் மாண்பையே கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

தற்போது பதவியில் உள்ள அரசாங்கம், தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியை முழுமையாக அம்பலப்படுத்துவோம் என்று உறுதியளித்திருந்தது. அதற்கேற்ப சில புதிய விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த காலங்களைப் போலவே இதுவும் மற்றுமொரு கண்துடைப்பு நாடகமாக முடிந்துவிடக் கூடாது என்பதே நாட்டு மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும். இந்த அரசாங்கமாவது தனது ஆட்சிக் காலத்திற்குள் உண்மையான சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் ஒரு பாடமாக இருக்க வேண்டுமே தவிர, அது மீண்டும் மீண்டும்அரசியல்லாபங்களுக்காகப்பயன்படுத்தப்படும் ஒரு துருப்புச் சீட்டாக அமையக் கூடாது. மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டு, உண்மைகள் பகிரங்கப் படுத்தப்படும் போது மட்டுமே உயிரிழந்தவர்களின் ஆத்மாக்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மையான நீதி கிடைக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


# மதுவரித் திணைக்களத்துக்கு காலாண்டில் 70.4 பில். வருவாய்

**கொழும்பு, ஏப்.22**
**2026ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மதுவரித் திணைக்களம் 70.4 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. இது இந்தக் காலப்பகுதிக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த 61.95 பில்லியன் ரூபா வருமான இலக்கை விட 13.6 வீதம் அதிகமாகும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

எதிர்பார்க்கப்பட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் 113.6 வீத வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 114.8 வீத வளர்ச்சியாகப் பதிவாகியுள்ளது. 2026ஆம் ஆண்டிற்காகத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த வருமான இலக்கு 245 பில்லியன் ரூபாவாகும். மதுபான உற்பத்தி நிலையங்கள் மற்றும் வடிசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள், மதுபானப் போத்தல்களில் பாதுகாப்பு முத்திரைகளை இடுவதைக் கட்டாயமாக்கியமை, சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்குஎதிரானதேடுதல்வேட்டைகளைத் தீவிரப்படுத்தியமை, புதிய அரசாங்கத்தின் முறையான வழிகாட்டல்கள் மற்றும் அதிகாரிகளின் அர்ப்பணிப்பு என்பன இதற்குக் காரணமாகும் என்றும் மதுவரி ஆணையாளர் நாயகம் எம். பி. என். ஏ. பேமரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)




# வீதியில் நின்றோரை மோதித்தள்ளிய கார்!

## ஒருவர் பலி


கொழும்பு, ஏப்.22
தம்புத்தேகம குருநாகல் பிரதான வீதியில் இடம்பெற்ற கார் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கார் ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்றிருந்த ஐவர் மீது மோதியதுடன், அருகில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு காரின் பின் பகுதியிலும் மோதி விபத்துக்குள்ளானது.
இந்த விபத்தில் வீதியோரத்தில் நின்றிருந்த இரு ஆண்கள், இரு பெண்கள் மற்றும் ஒரு சிறுமி என ஐவர் காயமடைந்தனர். விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதியும் காயமடைந்தார். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் அங்கு சிகிச்சை பெற்றுவந்த 74 வயதுடைய பெண் ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். (ச-இ)

# 8 இலட்சத்தைக் கடந்தது சுற்றுலாவிகள் வருகை!

கொழும்பு, ஏப்.22
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 8 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 809,595 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இந்தத் தரவுகளை அவதானிக்கும்போது கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது என்றும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# பெண் மீது தாக்குதல்; 9 பேர் கைது

கொழும்பு, ஏப்.22
கோகரல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதலந்த பகுதியில் கடந்த 16ஆம் திகதி பெண் ஒருவர் குழுவொன்றால் கொடூரமாகத் தாக்கப்படும் சி.சி.ரி.வி. மற்றும் கைபேசிக் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்த நிலையில் அந்தச் சம்பவம் தொடர்பாக 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)




# போலி இணையத்தளமூடாக 10 இலட்சம் ரூபா மோசடி!

கொழும்பு, ஏப்.22
தனியார் வங்கி ஒன்றின் அதிகாரபூர்வ இணையத்தளத்தைப் போன்று போலி இணையத்தளத்தை உருவாக்கி 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தமை தொடர்பில் 22 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கணினி குற்ற விசாரணைப் பிரிவின் வடமேல் மாகாணப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிர்த்த ஞாயிறு விசாரணை அநுர அரசில் முன்னேற்றம்!



## மல்கம் ஆண்டகை தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.22**

**ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முன்னேற்றமடைந்து வருகின்றது என்று மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று இடம்பெற்ற கொடூரமான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் ஏழாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது விசேட ஆராதனையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது கடந்த காலங்களில் விசாரணைகள் மந்தகதியில் இருந்தன.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் உயிர்த்த ஞாயிறு தொடர்பான விசாரணைகள் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, குறிப்பிடத்தக்க முன்னே ற்றங்களையும் கண்டுள்ளன. நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் உண்மையான நீதி, இந்த அரசாங்கத்தின் கீழ் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# நிலக்கரி ஊழலை மறைத்து வெள்ளையடிக்கிறது அரசு!

## திலித் ஜயவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவைப் பயன்படுத்தி நிலக்கரியைப் பால் ஊற்றி வெளுப்பாக்கும் தந்திரோபாயத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது"என்று சர்வஜன அதிகார கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜெயவீர குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நிலக்கரியைப் பால் ஊற்றி வெளுப்பாக்குவதற்காக விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அரசாங்கம் பயன்படுத்தும் ஒரு தெளிவான உபாயத்தை தற்போது முன்னெடுத்து வருகின்றது. இந்தத் தந்திரோபாயத்தின் ஊடாக, மிகப் பெரிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களை கழுவித் தூய்மைப்படுத்தி, தாரை தப்பட்டை முழங்க மீண்டும் இந்த மாளிகைக்குள் அழைத்து வர இந்த விசேட ஆணைக்குழு முயற்சிக்கின்றது. எமது நாட்டின் புகழ்பெற்ற சட்ட வரலாற்றையும் நீதியின் ஆதிக்கத்தையும் கேள்விக்குறியாக்கும் வகையில் இவர்கள் செயற்படுகிறார்கள். குறிப்பாக, கணக்காய்வாளர் நாயகம் ஒவ்வொரு விடயமாகத் தெளிவுபடுத்தி ஆதாரங்களுடன் கருத்துக்களை முன்வைத்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில், அவர்களைப் பால் ஊற்றி புனிதர்களாக்க முயற்சி செய்கிறார்கள் - என்றார். (ச-இ)

# எரிபொருள் கொள்வனவில் 350 கோடி ரூபா மோசடி!

## சம்பிக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.22

இலங்கைக்கு டீசல் விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்ட நிறுவனம், உலகச் சந்தையில் விலை அதிகரித்ததும் திட்டமிட்டு பழைய ஒப்பந்தத்தை மீறி, புதிய விலைமனு ஊடாக அதிக விலைக்கு எரிபொருளை விநியோகித்து ஊழலில் ஈடுபட்டுள்ளது என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'டெபிகியுரா' நிறுவனத்துடன் 5 டீசல் கப்பல்களைக் கொண்டுவர ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அப்போது ஒரு பீப்பாய்க்கான 'பிரீமியம்' தொகை 3.8 டொலராக மட்டுமே இருந்தது. இரண்டு கப்பல்களை விநியோகித்த பின்னர், யுத்த சூழலைச் சாட்டி 3ஆவது கப்பலைக் கொண்டுவர முடியாது என அந்த நிறுவனம் அறிவித்தது.

இதனையடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவசரமாகக் கோரிய போட்டியற்ற விலைமனுவை அதே 'டெபிகியுரா' நிறுவனம் பெற்றுக்கொண்டது. இம்முறை ஒரு பீப்பாய்க்கான பிரீமியம் விலையை 48 டொலராக முன்பை விட 12 மடங்கு அதிகம் அதிகரித்து எரிபொருளை விநியோகித்துள்ளது.

ஒரு பீப்பாய்க்கு மேலதிகமாக 44.2 டொலர் வீதம் வழங்கப்பட்டதன் மூலம், நாட்டுக்குச் சுமார் 350 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

சிங்கப்பூர் சந்தையில் ஒரு பீப்பாய் டீசல் 170 டொலராக இருக்கும் நிலையில், இலங்கை 286 டொலர் செலுத்தியதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்த விலைக்குக் கொள்வனவு செய்தால், உள்ளூரில் ஒரு லீற்றர் டீசலை 700 ரூபாவுக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படும்.

இத்தகைய மோசடி இடம்பெற்றுள்ளமை அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது 2011 ஆம் ஆண்டிலும் இதேபோன்ற 'விளையாட்டு' இடம்பெற்ற போது, அப்போதைய தலைவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்என்றார். (ச-இ)

# உயிர்த்த ஞாயிறு விசாரணை ஓர் அரசியல் விளையாட்டு!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் விவகாரத்தை தற்போதைய அரசாங்கம் முழுமையாக அரசியல் மயமாக்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் அமைச்சர் பிள்ளையான் மற்றும் முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சலே ஆகியோரின் கைதுகள் மற்றும் விசாரணைகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை மூடி மறைத்தவர்களே தற்போது விசாரணைகளை முன்னெடுப்பது ஒரு வேடிக்கையான விடயம். ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் இருந்த இப்ராஹிமின் புதல்வர்களே இந்தத் தாக்குக்குதலில் ஈடுபட்டனர். தனது கட்சிக்கு நிதி வழங்கியவர்களைப் பாதுகாத்து விட்டு, மற்றவர்கள் மீது குற்றஞ்சுமத்துவது நியாயமற்றது-என்றார். (சஇ)



# மாகாணத் தேர்தலை நடத்த அரசாங்கம் விரும்பவில்லை

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.22

மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட செயற்குழுவின் கூட்டம், திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டமை அரசாங்கத்தின் திட்டமிட்ட தாமதத்தையே காட்டுகின்றது என்று முன்னாள் அமைச்சரும் விசேட செயற்குழுவின் பிரதிநிதியுமான மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார். நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த செயற்குழுக் கூட்டத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆகியன முன்னிலையாகி, தேர்தல் தொடர்பான சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவிருந்தன. இந்த நிலையில், அந்தக் கூட்டம் திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது. தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தடையாக இருக்கும் சட்டச் சிக்கல்களைத் தீர்க்கவே இந்தச் செயற்குழு அமைக்கப்பட்டது. பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். இந்தச் செயற்குழுவின் பணிகள் மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என நிபந்தனை உள்ள நிலையில், இவ்வாறான தாமதங்கள் தேர்தலைக் காலங்கடத்தும் முயற்சியோ என ஐயத்தை ஏற்படுத்துகின்றன. அரசாங்கம் தேர்தல் விடயத்தில் காட்டும் இந்த மெத்தனப் போக்கைக் கைவிட்டு, செயற்குழுவின் நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டும். தேர்தலை மேலும் தாமதப்படுத்துவது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## போர்நிறுத்தக் காலத்தில்

# மேலும் பலம்பெற்றன அமெரிக்கப் படைகள்



# INVITATION FOR BIDS - 2026/02
## MARITIMEPATTU - PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 22.04.2026 until 05.05.2026** |
| **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 29.04.2026** |
| **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 06.05.2026** |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/01 | Construction of Arichchal Road at Karikkaddumolai North & Community Center front Road (New) at Karikkaddumolai North | Council | 3.05 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 46,000.00 | 18/Aug/2026 |
| 02 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/02 | Construction of Poothan Vayal Road (Cemetry Road) at Thanneroottu & Construction of Kanukkerny East 6th Cross Street at Kanukkerny | Council | 3.38 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 51,000.00 | 18/Aug/2026 |
| 03 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/03 | Construction of Uppumaveli Road (50 Acre Housing Scheme Road) at Karikkaddumoolai East & Construction of Thamaraikkerny Cemetery Road at Kumulamunai | Council | 3.38 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 51,000.00 | 18/Aug/2026 |
| 04 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/04 | Construction of Mill Road at Vattappalai & Construction of Navatkadu Multi-Purpose Hall Road (New) at Mulliyawalai West | Council | 3.38 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 51,000.00 | 18/Aug/2026 |
| 05 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/05 | Construction of Cemetery Road at Mulliyawalai East & Construction of Big Mosque Road (Hijrapuram Internal Road) at Hijrapuram | Council | 3.38 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 51,000.00 | 18/Aug/2026 |
| 06 | NP/14/44(01)/02/03/CF/CAPITAL/2026/06 | Construction of Kallappadu South Housing Scheme Road (New) at Mullaiyoor & Construction of Koddakkerny Road at Karikkaddumoolai South | Council | 3.38 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 51,000.00 | 18/Aug/2026 |
| 07 | NP/14/44(01)02/03/DE.RE/Capital/2026/01 | Construction of Murukan Kovil 4th Cross Road at Karikkaddumoolai South. | Council | 2.88 Mn | 77 Days | C9or Above (Highway) | 2500.00 | 21/July/2026 | 44,000.00 | 18/Aug/2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Local Authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Local Authority Procurement Committee,
Maritimepattu Pradeshiya Sabha,
Kovilkudiyiruppu,
Mullaitivu.
22.04.2026

(CR 47428) A


பென்டகன் தகவல்

வொஷிங்டன், ஏப். 22

ஈரானுக்கு எதிரான போர்நிறுத்தக் காலத்தைப் பயன்படுத்தி அமெரிக்கப் படைகள் வலுவாகக் கட்டமைக்கப்பட்டு வருகின்றன என்று பென்டகன் அறிவித்துள்ளது.

ஈரானுக்கு எதிரான அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில், அமெரிக்க மத்திய கட்டளையகத்தின் தளபதிகளில் ஒருவரான பிராட் கூப்பர் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-


ஈரானுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படைகள் மிகவும் உத்வேகமாக உள்ளன. போர்நிறுத்தக் காலம் அமெரிக்காவுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது. எமது போர்த் தந்திரங்கள் எதிரிகள் கணிக்கமுடியாத வகையில் முற்றாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தங்களை விரைவாகத் தகவமைத்துக் கொள்வதில் அமெரிக்க இராணுவம் உலகில் நிகரற்றது. இந்த விடயம் ஈரானுக்கு எதிரான போரில் மீண்டும் நிரூபணமாகி வருகின்றது.

எமது படைகள் ஈரானுடன் நீண்ட மோதலுக்குத் தயாராகவே உள்ளன - என்றார். (ம)

## அதிபர் ட்ரம்ப் கூறும்

# பொய்களால் பின்னடைவு!

தெஹ்ரான், ஏப். 22



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும் பொய்களால்தான் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடையும் என்று, ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா - ஈரான் இடையில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பில் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் மொகமட் பாகர் காலிபாப் மேலும் தெரிவித்ததாவது-

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த 24 மணிநேரத்துக்குள் ஏழு கூற்றுகளை முன்வைத்துள்ளார். அந்த ஏழு கூற்றுகளும் பொய்யானவை. ஈரானின்; நிலைப்பாட்டுக்கு முரணாகக் கூறப்படும் அந்தப் பொய்கள் பேச்சுவார்த்தைக்குப் பின்னடைவை ஏற்படுத்தும். இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையிலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது. அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடுவது தொடர்பில் இதுவரை நாங்கள் பேசவில்லை. எம்மிடம் உள்ள யுரேனியத்தை இன்னொரு நாட்டிடம் வழங்கும் எண்ணம் எமக்குத் துளியளவும் இல்லை- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் (26.04.2026)

"வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இற்கமைவாக எமது சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலானது கடந்த 14.03.2026ந் திகதி 21 கிளைகளுக்கும் நடைபெற்றது. அதில் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளுக்கான தேர்தல் நிறைவெண் இல்லாத நிலையில் நடைபெறவில்லை. எனவே அக்கிளைகளுக்கான அங்கத்தவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை சந்தர்ப்பம் வழங்கும் முகமாக தேர்தல் ஆனது 26.04.2026 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் குறித்த நேரத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை அங்கத்தவர்கள் தங்கள் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி கிளைக்குழுத் தேர்தலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் தொடர்பான விபரம்
(26.04.2026 – முற்பகல் 10.00மணி)

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 04. | ஆனைக்கோட்டை | திரு. பா.பாலரவி | முள்ளி பொதுநோக்கு மண்டபம், ஆனைக்கோட்டை |
| 07. | நவாலி மணிமண்டபம் | திரு: வ.கிருஷாந் | மணிமண்டபம், நவாலி |
| 08. | நவாலி தெற்கு | திரு. நா.ஜெயவதனன் | கிளை இல 08, கிளைக்கட்டிடம் |
| 10. | மானிப்பாய் தெற்கு | திரு. க.சசிகரன் | மானிப்பாய் இந்துசமய சங்கம்,வேலக்கைபிள்ளையார் கோவிலடி |
| 11. | மானிப்பாய் வடக்கு | திரு. ச.அருள்நாதன் | தலைமைக்காரியாலயம், மானிப்பாய் |
| 14. | சண்டிலிப்பாய் வடக்கு | திரு. த.கண்ணதாசன் | சிவசக்தி சனசமூக நிலையம், சண்டிலிப்பாய் வடக்கு |
| 15. | ஆலங்குழாய் | திரு. பா.பாலவரதன் | கிளை இல 15, கிளைக்கட்டிடம் |
| 16. | சுதுமலை வடக்கு | திரு. ஜெ.சதீஸ் | நாமகள் முன்பள்ளி சுதுமலை வடக்கு |
| 17. | சுதுமலை தெற்கு | திரு. க.சுரேஸ்பாபா | கிராம அபிவிருத்திச் சங்கம், சுதுமலை வடக்கு |
| 20. | உயரப்புலம் | திரு. இ.தயாகரன் | பாரதி சனசமூக நிலையம் |
| 23. | கெல்லாவில் | திரு. இ.வேல்குமார் | யுவசக்தி சனசமூக நிலையம் |
| 24. | மாகியம்பதி | திரு. அ.சஞ்சயன் | ஆலங்குழாய் சனசமூக நிலையம் |
| 25. | மானிப்பாய் வடகிழக்கு | திரு. பா.குருபரன் | பாரதி சனசமூக நிலையம், மானிப்பாய் வடகிழக்கு |

மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
மானிப்பாய்
22.04.2026

செயலாளர்
(திரு. துரைராசா கருணாகரன்)
18.04.2026

## சேக்ஸ்பியர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறிப் பிரிவினரின் ஏற்பாட்டில் சேக்ஸ்பியர் நினைவு தின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் சிவசக்தி ஜெயராஜா கலந்துகொள்வார். கலாசாலையின் ஆங்கிலத் துறை விரிவுரையாளர்களான வசந்தி வைத்திலிங்கம், சுஜீவா அருள்லிங்கம் ஆகியோர் சேக்ஸ்பியர் படைப்புகள் தொடர்பான கருத்துரைகளை ஆற்றுவர். (க-66)


## PULAVAR MATRIMONY

76 ஆண்டுகள் நம்பிக்கை பெற்ற
தமிழ் திருமண சேவை
உங்கள் வாழ்க்கைத் துணையை இப்போது எளிதாக தேடுங்கள்.


- Online பதிவு செய்யலாம்.
- அல்லது நேரடியாகவும் பதிவு செய்யலாம்.
- ✓ உலகம் முழுவதும் சேவை
- ✓ நம்பகமான பொருத்தங்கள்
- ✓ விரைவான இணை தேடல்.



தொடர்பு எண்கள்:
021 222 7147
077 075 7610
077 075 7896
Website address:- www.pulavarmatrimony.com

(CS/61274) J-1


## மரண அறிவித்தல்



கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் வெளி 14:13

### வல்லிபுரம் சூரியகுமார் (டேவிட்)

(பருத்தித்துறை நீதி மன்ற ஊழியர்)

தோற்றம் 27.03.1978 மறைவு 20.04.2026

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சூரியகுமார் (டேவிட்) அவர்கள் கடந்த (20.04.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பூலோகம் தம்பதியரின் பாசமிகு மகனும், தேவராசா, மஞ்சுளா, வசந்தராணி ஆகியோரின் சகோதரனும், சுமதி, சுஜித்தா, ஜெபநேசன் ஆகியோரின் பேரனும், தயாபரன், மீராஜெஸ்மின், சலோமி, கபிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.04.2026) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் இருபாலையில் உள்ள கானன் ஜெபாலயத்தில் நடைபெற்று காலை 08.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இராஜவீதியில் உள்ள கானன் ஜெபாலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
இருபாலை, கானன் ஜெபாலயம்
076 543 8047

(CS/61272) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1940



மறைவு 19 . 04 . 2026

### வேலுப்பிள்ளை துரைராசா (அருமை)

(பிரபல புகையிலை வர்த்தகர் (RMVT),
முன்னாள் இ.போ.ச நடத்துனர், நாரந்தனை தான் தோன்றி
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய முன்னாள் தலைவர்)

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை துரைராசா அவர்கள் கடந்த (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை (உத்தமி) தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணி (ராணி) யின் அன்புக் கணவரும், மணிவேந்தன், மனோகரி, மைதிலி, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியா, ஜெயகரன், மயூரமுருகன், முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜித், சஜித், ஜனுசன், சகீஜன், சனோஜா, சாயீனுஜா, டக்ஷிகா, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அனோஸ்கா, மகிஷா, சஜேக் ஆகியோரின் அன்புப் பூட்டனும், பூமணி, காலஞ்சென்றவர்களான நேசமணி, தவநாயகம், கயிலாசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-04-2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை 8ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை
076 963 1541


(CS/61277) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டம் வரும்போது
கண்ணை மூடாதே.
அது உன்னைக் கொன்று
விடும்,
கண்ணைத் திறந்து பார்
அதை வென்றுவிடலாம்.
-அப்துல் கலாம்

புதன் பொய்கை

22.04.2026
புதன்கிழமை

# அரங்கியலூடாக மொழிக்கற்றலில் புதிய திசை!

## பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனுடன் ஒரு நேர்காணல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறைப் பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் ஆங்கிலம் சார்ந்த செயற்பாடுகளுடன் நாடக எழுத்து, தயாரிப்பு, இயக்கம், மேடை ஏற்றம், விமர்சனம், கவிதை, பத்தி எழுத்துகள் ஆகிய துறைகளுடன் ஈடுபாடு கொண்டவர். அண்மையில் அவர் பேராசியராகவும் உயர்வுபெற்றவர். உதயன் 'புதன் பொய்கைக்காக' அவருடன் நிகழ்த்தப்பட்ட நேர்காணல் இது.

■ நேகண்டவர்: வெற்றிவேல் சக்திவேல்

**கேள்வி:** அண்மையில் உங்கள் 'தேடிய தேட்டங்கள்' கவிதைநூல் வெளியீடு இணுவில் மண்ணில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தப் படைப்புலகப் பயணத்தின் தொடக்கப்புள்ளி எது?

**பதில்:** மிக்க நன்றி. இந்த வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் ஆணிவேர் எனது தாய்மடியான மானிப்பாய் இந்துக் கல்லூரியே. அங்கு எனக்குள் விதைக்கப்பட்ட கலை உணர்வும், இலக்கியத்தேடலுமே இன்று என்னை ஒரு படைப்பாளியாக உங்கள் முன் நிறுத்தியிருக்கிறது.

**கேள்வி:** வன்னி மண்ணில் யுத்த காலப்பகுதியில் ஒரு ஆங்கில ஆசிரியராக உங்கள் பணி சவால்கள் நிறைந்தது. அந்த அனுபவம் எப்படியிருந்தது?

**பதில்:** அது ஒரு மறக்கமுடியாத தசாப்தம். வவுனியா மற்றும் பூநகரியின் கௌதாரிமுனை, வேரவில் போன்ற பின்தங்கிய கிராமங்களில் பணியாற்றிய போது வசதிகள் மிகக்குறைவு. வகுப்பறைகள் இல்லாத சூழலில், மரநிழல்க ளையே மேடைக ளாக்கினேன். 'வகுப் பறை அரங் குகள்' (Classroom Theatres) மூலம் நாடகப் பாணியில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பித்தேன். அந்த நெருக்கடியான காலத்திலும் மாணவர்கள் காட்டிய ஆர்வம் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளது.



**கேள்வி:** ஒரு சாதாரண ஆசிரியராகத் தொடங்கி, இன்று பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்திருக்கும் உணர்களது கல்விப்பயணம் குறித்து?

**பதில்:** வேரவில் பாடசாலையில் பணியாற்றியபோதே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக இணைந்து முதலாம் ஆண்டு சித்தியடைந்தேன். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்த்தில் பட்டதாரி மாணவனாக இணைந்து ஆங்கில இலக்கியம், மொழியியல் மற்றும் அரங்கியல் பயின்றேன். அங்கு பெற்ற 'திறமைச் சித்தி' நான் பயின்ற அதே பல்கலைக் கழகத்திலேயே ஆங்கில போதனாசிரியராகும் வாய்ப்பைத் தந்தது. பின்னர் இந்தியாவின் ஹைதராபாத்தில் கலாநிதி (Ph.D) பட்டத்தைப் பெற்று, இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளைத் தொடர்கிறேன்.

**கேள்வி:** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையை வடிவமைப்பதில் உங்கள் பங்கு முக்கியமானது. அதன் தற்போதைய நிலை என்ன?

**பதில்:** 2019இல் இத்துறை தனித்துவமாக உருவான போது, தரமான பாடத் திட்டங்களை வகுப்பதில் முனைப்புக் காட்டினோம். [illegible] றாக்குறையால் முடங்கிய மொழி பெயர்ப்புக் கற்கை நெறியை சோ. பத்மநாதன் போன்ற அறிஞர்களின் துணையுடன் மீட்டெடுத்தோம். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் ஆதரவுடன், 2025இல் ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தும் அளவிற்கு இன்று இத்துறை உலகத்தரத்திற்கு உயர்ந்துள்ளது.

**கேள்வி:** 'அரங்கியல் ஊடாக மொழிக் கற்றல்' என்பது உங்கள் தனித்துவமான பாணி. இது ஆய்வு ரீதியாக எப்படி வெற்றியளித்தது?

**பதில்:** எனது கலாநிதி மற்றும் முதுதத்துவமாணி ஆய்வுகள் இதையே மையப்படுத்தின. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களிடம் நான் நடத்திய 'வகுப்பறை அரங்கு' கள ஆய்வு, அவர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலில் வியக்கத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனைப் பாடநூல்களாகவும், 'மேடைப் பேச்சு', 'தொடர்பாடல் திறன்' சார்ந்த குறுந்தகடுகளாகவும் வெளியிட்டுள்ளேன்.

**கேள்வி:** கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு எனத் தமிழில் உங்களது பங்களிப்பும் விருதுகளும் கவனிக்கத்தக்கவை. அவை பற்றி?

**பதில்:** பேராசிரியர் சி. மௌனகுருவிடம் கூத்துக்கலையும், குழந்தை ம. சண்முகலிங்கத்திடம் அரங்கியலும் பயின்ற அனுபவமே என்னைச் செதுக்கியது. எனது 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' (நாடகத் தொகுப்பு) மற்றும் 'ஈழத்து கலை இலக்கிய உலகு' (விமர்சன நூல்) ஆகியவற்றுக்கு இலங்கை அரசின் சாகித்திய விருதுகள் கிடைத்தன. [illegible] மாநாடுகளில் பங்கேற்றபோது அண்டை நாட்டு கவிதைகளைத் தொகுத்து 'சுதந்திரம்' எனும் பெயரில் மொழிபெயர்த்தேன்; இதற்கும் அரச விருது கிடைத்தது. இந்த இடைக் காலத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை பயிற்சி நெறியில் எனக்கு ஆங்கில பாட விரிவுரையாளராக இருந்த கவிஞர் சோ.ப. என அழைக்கப்படும் கவிஞர் சோ.பத்மநாதனிடம் ஆங்கில பாடம் மட்டுமல்ல ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், இந்து நாகரிகம் ஆகிய மூன்று பாடங்களையும் வெளிவாரி பட்டப்படிப்புக்காக கற்றேன். அவருடன் ஒரு குருசீட முறையில் கலை இலக்கிய உலகத்தில் அவரது கவியரங்குகள் உரையரங்கங்கள் எல்லாவற்றையுமே பின்பற்றியதாக எனது கற்றல்முறை அமைந்தது. அவரின் ஊக்கத்தாலேயே ஆங்கிலத்தில் 'சற்றடே றிவியு'பத்திரிகையில் எழுதினேன். அவரது ஆங்கிலக் கட்டுரைகளை தொகுத்து ' SOPA Miscellany' என்ற தலைப்பில் யாழ்ப்பாண ஆங்கில சங்கத்தின் ஊடாக வெளியிட்டும் இருந்தேன்.


**கேள்வி:** ஈழத்து ஆளுமைகளை ஆவணப்படுத்துவதில் நீங்கள் காட்டும் ஆர்வம் வியப்பிற்குரியது... அதனை எப்படிச் சாத்தியப்படுத்துகிறீர்கள்?

**பதில்:** ஆம், அது காலத்தின் தேவை. பேராசிரியர் சுசீந்திரராஜா, பேராசிரியர் மௌனகுரு மற்றும் கலைஞர் குழந்தை சண்முகலிங்கம் ஆகியோரின் படைப்புகளையும் நேர்காணல்களையும் தொகுத்து நூல்களாக வெளியிட்டிருக்கிறேன். அதேபோல, எனது ஊரான சுதுமலையைச் சேர்ந்த எழுத்தாளர் சாந்தனின் படைப்புகளை ஆங்கில உலகிற்கு 'Santhan's World in a Flash' ஊடாகக் கொண்டுசேர்த்ததை ஒரு கடமையாகவே கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அயலவனும் ஆபத்தான நிழலும்:

■ ச. அன்ரன் அருள்வண்ணன்



# இந்தியாவின் 'எல்லை தாண்டிய' உளவுப்போர்!'

"யார் உங்கள் அயலவன்?" ஈழத்தில் நிலம் வாங்குவதாக இருந்தால், முதலில் கேட்கப்படும் கேள்வி இது தான். பக்கத்து வீட்டுக்காரன் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, நிம்மதியைக் குலைப்பவனாக இருந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் மிகத் தெளிவாக இருப்பார்கள். ஒரு மனிதனுக்கு இது எவ்வளவு முக்கியமோ, ஒரு நாட்டுக்கு அதைவிடப் பல மடங்கு முக்கியம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஈழத்தமிழர்களுக்கு 'அயல்நாடு' என்பது பல நேரங்களில் ஆறாத வடுக்களைத் தந்த வரலாறாகவே இருக்கிறது.

### 1990களின் கறுப்புப் பக்கங்கள்

1987ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு - கிழக்கில் 'அமைதிப்படை' என்ற பெயரில் இந்தியா கால்பதித்தது. ஆனால், அந்த 'அமைதி' என்பது வெறும் பெயரளவில் மட்டுமே இருந்தது. யாழ்.போதனா மருத்துவ மனைப் படுகொலை முதல் பாலியல் வன்புணர்வுகள், சித்திரவதைகள் என இந்திய அமைதிப்படை நிகழ்த்திய கொடூரங்கள் இன்றும் கறையாகப் படிந்துள்ளன. 2009 போரின் இறுதிக் கட்டம் வரை இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிய நிழல் ஆதரவு என்பது தமிழின அழிப்பின் ஒரு முக்கியமான அங்கமாகவே பார்க்கப்படுகிறது.


### மோடியின் புதிய இராஜதந்திரம்?

சமகால இந்திய அரசியலில் பிரதமர் நரேந்திர மோடியின் மேடைப் பேச்சுகள் ஒரு விஷயத்தைத் தெளிவாகப் பறைசாற்றுகின்றன: "நாங்கள் ஒருவரைத் தீவிரவாதி எனத் தீர்மானித்தால், அவர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் தேடிச் சென்று அழிப்போம்." இது ஒரு தேசத்தின் பாதுகாப்பிற்கான முழக்கமாகத் தெரிந்தாலும், சர்வதேசச் சட்டங்களை மீறும் ஒரு அபாயகரமான போக்காகவே உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

### மூன்று நாடுகளில் 'ஒப்ரேஷன் சீக்கியர்'

பிரித்தானியா, கனடா, அமெரிக்கா என மூன்று நாடுகளிலும் சீக்கிய சமூகத்தின் முக்கியமான தலைவர்களைக் குறிவைத்து இந்தியா வீசிய வலை, சர்வதேச உளவுத்துறையினரால் அம்பலப்படுத்தப்பட்டது. ஜூன் 15, 2023 அன்று அவதார் சிங் கண்டார் மருத்துவமனையில் மர்மமான முறையில் மரணமடைந்தார். அவர் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதாகக் கருதப்பட்டாலும், ஆதாரங்கள் மழுப்பப்பட்டன.

அவதார் சிங் இறந்து மூன்றே நாள்களில், ஹார்டிப் சிங் நஜார் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்டார். இது சாதாரணக் கொலையல்ல; இந்திய உளவுத்துறையின் நேரடித்திட்டம் என்பதைப் பிரித்தானியாவின் GCHQ மற்றும் கனடியப் புலனாய்வு அமைப்புகள் ஆதாரங்களுடன் நிரூ



பித்தன. கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்திலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தது உலக அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தச் சங்கிலித்தொடரின் அடுத்த இலக்கு நியூயோர்க்கில் வசிக்கும் சட்டத்தரணி குர்பத்வான்ட் சிங் பண்ணுன. இதற்காக நிகில் குப்தா என்ற ஒரு கிரிமினலை இந்தியப் புலனாய்வுத்துறை அணுகியது. "பண்ணுனைக் கொன்றால் உன் மீதான போதைப் பொருள் வழக்குகளைத் தள்ளுபடி செய்வோம்" என்பதுதான் டீல்.

நிகில் குப்தா ஒரு கூலிப் படையைத்



தேடிச்செல்ல, அங்கே தான் விதி விளையாடியது. அவர் அணுகிய நபர் அமெரிக்காவின் DEA (Drug Enforcement Administration) அதிகாரி. அவர் அறிமுகப்படுத்திய 'கூலிப்படையினனோ' நியூயோர்க் காவல்துறையின் இரகசிய அதிகாரி .B

சட்டத்தரணியின் நடமாட்டங்களை ஜி.பி.எஸ். லொகேஷன் மற்றும் புகைப்படங்களுடன் குப்தாவுக்கு அனுப்பி, முன்தொகையாக 15,000 டொலரைக் கைமாற்றினர் (முழுத் தொகை 100,000 டொலர் ). இறுதியாக, குப்தா செக் குடியரசு வழியாக அமெரிக்கா வர முயன்றபோது விமானநிலையத்தில் கச்சிதமாகக் கைதுசெய்யப்பட்டார்.

### ஆதாரமாகச் சிக்கிய 'அமானத்'

கைதுசெய்யப்பட்ட குப்தாவின் அலைபேசியைச் சோதனையிட்டபோது, இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' (RAW)வின் அதிகாரி விக்ரம் யாதவ் என்பவருடன் அவர் தொடர்பில் இருந்தது உறுதிசெய்யப்பட்டது. அலைபேசியில் 'அமானத்' என்ற பெயரில் விக்ரம் யாதவின் இலக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா மற்றும் கனடாவில் நடந்த இந்தப் படுகொலை முயற்சிகளுக்கான ஆணை இந்தியாவிலிருந்தே வந்தது என்பதைத் தொழில்நுட்பத்தரவுகள் ஆணித்தரமாக மெய்ப்பித்தன.


### கைகுலுக்கவா? கைகளைக் கழுவவா?

ஒரு காலத்தில் 'ஜனநாயகத்தின் காவலன்' எனத் தன்னைக் காட்டிக்கொண்ட இந்தியா, இன்று சர்வதேச அளவில் 'மர்மக் கொலைகளைச் செய்யும் நாடு' என்ற பிம்பத்தைப் பெற்றுள்ளது. மேற்கத்திய நாடுகள் இந்தியாவுடன் பொருளாதார ரீதியாகக் கைகுலுக்கினாலும், அதன் உளவுத்துறையின் 'நிழல் வேலைகளை' அருவருப்புடனேயே பார்க்கின்றன.

அயலவன் என்பவன் பாதுகாப்பிற்கு உரியவனா அல்லது பின்னாலிருந்து குத்துபவனா என்பதை உலகம் இன்று இந்தியாவின் செயல்களைக் கொண்டே தீர்மானித்துவருகிறது.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

## செயற்கை நுண்ணறிவின் (AI) வரலாறு



கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்ட் பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப் படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவுசெய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக தொழிற்றுறையில் குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்புப் பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி தொற்றுநோயியல் ஆராய்ச்சி கல்வியியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியல் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

● கலாநிதி மககந்திரராஜா பிரவீணன்

செயற்கை நுண்ணறிவின் (AI) வரலாறு 20ஆம் நூற்றாண்டின் தொடக்க மற்றும் நடுப்பகுதிகளில் பல அடிப்படை அறிவியல் துறைகளின் கருத்துகள் ஒன்றிணைந்ததிலிருந்து தொடங்குகிறது. நரம்பியல் (neurology) துறையில் மனித மூளை மின்சாரச் சிக்னல்களைப் பரிமாறும் நரம்புக்கலங்களின் வலையமைப்பாகப் பார்க்கப் படத்தொடங்கியது. cybernetics துறையில் பின்னூட்டல் (feedback) மூலம் அமைப்புகள் கட்டுப்பாட்டையும் நிலைத்தன்மையையும் எவ்வாறு அடைகின்றன என்பது ஆய்வு செய்யப்பட்டது. அதேவேளை, information theory தகவலை எவ்வாறு digital வடிவில் சேமிக்கவும் பரிமாறவும் முடியும் என்பதற்கான அடித்தளத்தை வழங்கியது. மேலும், Alan Turing அவர்கள் முன்வைத்த theory of computation, எந்தவொரு கணிப்பீட்டுச் செயல்முறையையும் ஒரு இயந்திரம் மூலம் நிறைவேற்றமுடியும் என்பதைக் காட்டியது. இத்தகைய முன்னேற்றங்கள் அனைத்தும் சேர்ந்து இலத்திரனியல் மூளை (electronic brain) ஒன்றை உருவாக்கமுடியும் என்ற சிந்தனையை உருவாக்கின; இதுவே செயற்கை நுண்ணறிவின் அடிப்படை அறிவியல் தளமாக அமைந்தது. இந்த அறிவியல் முன்னேற்றம் 1956ஆம் ஆண்டில் நடைபெற்ற Dartmouth மாநாடு மூலம் உச்சத்தை எட்டியது; இதுவே செயற்கை நுண்ணறிவு ஒரு தனித் துறை அறிவியல் களமாக அதிகாரபூர்வமாக உருவான தருணமாகக் கருதப்படுகிறது. John McCarthy, Marvin Minsky போன்ற ஆய்வாளர்கள் மனித நுண்ணறிவின் கூறுகளான learning, reasoning, perception ஆகியவை துல்லியமாக விவரிக்கப்பட்டு இயந்திரங்களால் உருவாக்கப்படலாம் என வாதிட்டனர். இதே காலகட்டத்தில், Alan Turing முன்வைத்த Turing Test, ஒரு இயந்திரம் மனிதனைப் போலவே உரையாட முடிந்தால் அது 'நுண்ணறிவு' உடையதாகக் கருதப்படலாம் என்ற நடைமுறை மற்றும் தத்துவ அடிப்படையை வழங்கியது.

இந்த ஆரம்பகாலம் மிகுந்த நம்பிக்கையால் நிரம்பியிருந்தது; சில தசாப்தங்களுக்குள் மனிதனுக்குச் சமனான மட்டத்தில் செயற்கை நுண்ணறிவு உருவாகும் எனப் பலர் எதிர்பார்த்தனர். 1956 முதல் 1974 வரையிலான ஆரம்பகாலத்தில், செயற்கை நுண்ணறிவுத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக 'reasoning as search' என்ற அணுகுமுறை முக்கியமானதாக இருந்தது.

இதில், பிரச்சினை தீர்க்கும் செயல்முறை என்பது ஒரு structured solution spaceஇல் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து சரியான தீர்வை அடைவதாகக் கருதப்பட்டது. இந்த அணுகுமுறை search trees, planning algorithms, gameplaying systems போன்ற அடிப்படை AI முறைகளுக்கான தளமாக அமைந்தது. குறிப்பாக விதிமுறைகள் தெளிவாக இருக்கும் சதுரங்கம் போன்ற பலகை விளையாட்டுகள், puzzles போன்ற விடயங்களில் இத்தகைய முறைகள் மிகுந்த வெற்றியைப் பெற்றன.

இதனுடன் இணைந்து, உயிரியல் அமைப்புகளை முன்மாதிரியாகக் கொண்ட செயற்கை நரம்புக்கல வலையமைப்பு (artificial neural networks) என்ற அணுகுமுறையும் உருவானது. இவை வலையமைப்பாக இணைந்த நியூரோன்களைக் கொண்டு அமைந்தவையாகும்; இவை உள்ளீட்டுச் சிக்னல்களை செயலாக்கி, learning மூலம் தங்களது internal weightsஐ மாற்றிக்கொள்ளும். இதனால் விதி அடிப்படையிலான முறைகளுக்கு மாற்றாக dataஇல் இருந்து கற்றுக்கொள்ளும் இணைப்புமையப்பட்ட (connectionist) அணுகுமுறை உருவானது. இதேசமயம், logic மற்றும் விதிமுறைகளில் அடிப்படையாக்கப்பட்ட symbolic AI அணுகுமுறையும் தொடர்ந்து வளர்ந்தது. இந்த இரண்டு அணுகுமுறைகளுக்கிடையேயான வேறுபாடு, செயற்கை நுண்ணறிவுத்துறையின் அடிப்படைச் சிக்கல்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

ஆனால் ஆரம்ப வெற்றிகளுக்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவுத்துறை பல கட்டுப்பாடுகளை எதிர்கொண்டது. இதன் விளைவாக, ஆராய்ச்சி நிதி மற்றும் ஆர்வம் குறைந்த காலகட்டங்கள் ஏற்பட்டன; இவை செயற்கை நுண்ணறிவுத் துறையின் குளிர்காலங்கள் (AI winters) என அழைக்கப்படுகின்றன. 1950-60களின் அதிக நம்பிக்கைக்குப் பின் 1970களில் ஏற்பட்ட மந்த நிலை, பின்னர் 1980களில் expert systems மூலம் ஏற்பட்ட மீளுருவாக்கம், அதன்பின் மீண்டும் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவை இதற்குச் சான்றாகும். இந்த வரலாறு, செயற்கை நுண்ணறிவு முன்னேற்றம் ஒரு நேர்கோட்டில் முன்னேறிச் செல்லாது; அது சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் தொழில்நுட்பத் திறன்களின் இடையிலான முரண்பாடுகளால் பாதிக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

இந்த ஆரம்பகாலச் செயற்கை நுண்ணறிவின் திறன்களையும் வரம்புகளையும் விளக்கும் முக்கியமான உதாரணமாக ELIZA கருதப்படுகிறது. 1960களில் உருவாக்கப்பட்ட இந்த natural language processing system, ஒரு சீர்மியர் போல உரையாடலை simulation செய்தது. அதாவது எதுவும் புரியாமலே அனுதாபத்துடன் பதில் சொல்வதுபோல கிளிப்பிள்ளை மாதிரி நடிக்க இதனால் முடியும். இது மிக எளிய pattern matching விதிகளை மட்டுமே பயன்படுத்தினாலும், பயனாளர்கள் அதற்கு உண்மையான புரிதலும் உணர்ச்சியும் உள்ளதாகக் கருதினர். இந்த நிகழ்வு பின்னர் ELIZA effect என அழைக்கப்பட்டது. இதன் மூலம், செயற்கை நுண்ணறிவின் 'நுண்ணறிவு' என்பது சில சமயங்களில் தொழில்நுட்பத் திறனை விட மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் எதிர்பார்ப்புகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது. ஆகவே, செயற்கை நுண்ணறிவின் வரலாறு என்பது வெறும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் வரலாறு மட்டுமல்ல; அது மனித உணர்வு, தவறான புரிதல்கள், மற்றும் நெறிமுறைச் சிக்கல்களுடனும் நெருக்கமாக இணைந்துள்ளது.

அடுத்த வாரம் தொடரும்......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயர்தரப் பெறுபேறு: ஒரு புதிய பாதைக்கான திறவுகோல் மட்டுமே!



■ திருமதி பிரதீபா சிவகுமார்
தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர்
விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(கடந்த வாரத்தின் தொடர்ச்சி.......)

க.பொ.த. (A\L) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள். இடையில் பரீட்சைக்குத் தோற்றாது விடலாம். எனினும் மூன்று தடவைகளுக்கு மேற்பட்டு பரீட்சைக்குத் தோற்றி பெற்றுக்கொண்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லது முன்னைய ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிப்பதற்கு மாணவரொருவர் தகுதியற்றவராவர். பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டத்தினைத் தீர்மானிப்பதற்கு இறுதி மூன்று வருட காலப்பகுதியில் கூடிய காலம் கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே அவரது பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாகக் கருதப்படும்.

கண்பார்வையற்ற, அங்கவீனரான பரீட்சார்த்திகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள், விளையாட்டுகளில் தனிச்சிறப்பு வாய்ந்த திறமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள், ஆயுதப்படைகள், பொலிஸ் சேவை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றில் சேர்ந்துள்ள ஆளணியினர், வெளிநாடுகளில் பயின்ற இலங்கையரும், வெளிநாட்டு மாணவர்களும், ஆசிரியர்களின் அனுமதி, மேலதிக அனுமதி என விசேட ஏற்பாடுகளின்கீழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

பெறுபேறுகள் வெளியானவுடன் மிக முக்கியமாகச்செய்யவேண்டியது, அந்த ஆண்டுக்கான பல்கலைக்கழக கைநூலினை (Hand Book)) முழுமையாக வாசிப்பதாகும். இதில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள பாடநெறிகள், அவற்றுக்கான தகுதிகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள் விரிவாகத் தரப்பட்டிருக்கும். புள்ளி, மாவட்ட (District rank)) மற்றும் தேசிய மட்ட தரவரிசையைப் புரிந்துகொண்டு, கடந்த காலங்களில் அந்தப் புள்ளிக்கு எவ்வகையான பாடநெறிகள் கிடைத்துள்ளன என்பதை ஒருமுறை ஆராயவேண்டும்.

ஆனால் இவற்றில் சில கற்கைநெறிகள் உயர்தரத்தில் சில பாடங்களோடும், சில க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில், கணிதத்தில் திறமைச் சித்தியோடும் (C)தொடர்புள்ளவை. அத்தோடு சில கற்கைகள் பொது உளச்சார்பு பரீட்சையோடும் (Aptitute test) தொடர்புடையவை.

சில கற்கைநெறிகளுக்கு உளச்சார்புப் பரீட்சைகள்(Aptitute test) உள்ளன. அவற்றில் சித்தி பெற்றாலே அந்த கற்கைநெறிக்கான வாய்ப்பு கிடைக்கும். உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அந்தந்த ப்ல்கலைக்கழகங்களால் கோரப்படும். அவற்றில் பல பெரும்பாலும் பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்பபடிவம் (First Form) வெளியாகும் முன்னரே பத்திரி கைகள் மற்றும் இணையத்தளங்களினூடாகக் கோரப்படுவதை அவதானித்து அந்தப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கத் தவறவிட வேண்டாம்.

உங்கள் பெறுபேறு 3A or 3S ஆக இருக்கலாம். 3 பாடங்களிலும் சித்தி பெற்ற அனைவரும் அது எத்தகைய பெறுபேறாக இருந்தாலும் தவறாது பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவத்தை (First form) கட்டாயமாக நிரப்பவேண்டும்.

நீங்கள் பரீட்சையை மிகச்சிறப்பாக எழுதியும், எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை எனத் திடமாக நம்பினால், காலதாமதமின்றி மீள் திருத்தத்திற்கு (Re correction/ Rescrutiny) விண்ணப்பியுங்கள். இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. சிறிய புள்ளி மாற்றம் கூட உங்கள் புள்ளியில் (ZScore) பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, பல்கலைக்கழக அனுமதியை உறுதிசெய்யக்கூடும். விடைத்தாள் மீள்திருத்த விண்ணப்பம் DEAD LINE 22ND April 2026.

உங்களுக்கு பல்கலைக்கழகக் கற்கை வாய்ப்புக் கிடைக்கும், கிடைக்காது என்பதை நீங்களே தீர்மானிக்கவேண்டாம். அல்லது மற்றையவர்களின் கருத்தின் அடிப்படையில் தீர்மானிக்கவேண்டாம். அதனைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானிக்கட்டும். பல்வேறு கற்றைநெறிகளின் அனுமதிக்குத் தேவையான 'வெட்டுப் புள்ளிகள்' பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகிறது. குறிப்பிட்ட கற்கைநெறிக்கான மற்றும் பல்கலைக்கழகத்திற்கான 'வெட்டுப்புள்ளி' வருடத்துக்கு வருடம் மாறுபடுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வவ இணையத் தளத்தில் முன்னைய வருட வெட்டுப்புள்ளியில் பரீட்சார்த்திகள் தங்கியிருக்க வேண்டாம். ஏனெனில் குறித்த 'UniCode' இன் கிராக்கியின் தன்மையினை விளக்கவே அத்தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சில வேளைகளில் சில மாணவர்கள் மீண்டுமொருமுறை (2nd / 3rd attempt) உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் எதிர்பார்ப்புடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காமல் விடலாம். சில மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு பதிவு (Registration)செய்து கொள்ளாது விடலாம். அதனால் மாணவர்கள் தமது புள்ளி மற்றும் கடந்த வருடத்திற்கான வெட்டுப் புள்ளிகளைக் கவனத்திற் கொள்ளாது தாம் விண்ணப்பிக்கத் தகுதிபெறுகின்ற ஆகக் கூடுதலான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கவேண்டும். கடந்த வருடம் 9 குறைநிரப்புப் பட்டியல் (Registration) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தின் [illegible] னத்தில் உள்ள ஒவ்வொரு கற்கைநெறிக்கும் ஒரு தனியான குறியீடு; "UniCode" வழங்கப்படும். மாணவர்கள் தாம் தகுதி பெறுகின்ற 125 வரையிலான "UniCode" களுக்கும் விண்ணப்பிக்க முடியும். உங்களுக்கு மிகவும் பிடித்தமான பாடநெறியை முதலாவதாகப் பதிவிடுங்கள். உச்ச விருப்பொழுங்கு UniCode இலிருந்து குறைந்த விருப்பொழுங்கு "UniCode" வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். எனினும், உங்கள் புள்ளிமட்டத்திற்கு கிடைக்கக்கூடிய சாத்தியமுள்ள பாடநெறிகளையும் (உயர்ந்த பட்ச எண்ணிக்கையான "UniCode") வரிசைப் படுத்த மறக்காதீர்கள்.

தற்போது பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்பப்படிவம் "UniCode" னிலேயே நிரப்புவதால் நீங்கள் விண்ணப்பிக்கத் தகுதியான கற்கைநெறிகளைத் தானாகவே தெரியப்படுத்தும். அதனை உங்கள் விருப்பத்தெரிவு ஒழுங்கில் விண்ணப்பிக்கலாம். குறித்த பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்குப் போதுமான புள்ளி இருப்பினும் அவ் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கான "UniCode" இனை கோராத விண்ணப்பதாரிக்கு கற்கைநெறி வழங்கப்படமாட்டாது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக் கான விண்ணப்பங்கள் கோரப்படும். விண்ணப்பதாரிகள் இக்கைநூலில் காணப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய இணையத் தளத்தினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை இணையவழியாகப் "UniCode" பதிவேற்றும்போது உங்கள் தனிப்பட்ட விபரங்கள் மற்றும் பெறுபேறுகள் சரியாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.

ஏதேனும் ஒரு விபரத்தில் தவறு ஏற்பட்டால் அது உங்கள் பல்கலைக்ழக அனுமதியை பாதிக்கக்கூடும் என்பதால், சமர்ப்பிப்பதற்கு முன் சரிபார்ப்பது அவசியமாகும்.

இணையத்தள விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை உரிய ஆவணங்களுடன் உரிய திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு "UniCode" விற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டியது ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் கடமையாகும்.

பல்கலைக்கழகங்களில் கற்கைநெறிகளுக்கான விருப்ப வரிசையை மாற்றுதல்: ஒரு விண்ணப்பதாரி அனுமதிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதியிலிருந்து இரண்டு (2) வாரங்களுக்குள், இக்கைந்நூலின் அறிவுறுத்தல்களுக்கமைய தங்களின் கற்கைநெறிகளுக்கான "UniCode"களின் விருப்பொழுங்கை இணையத்தளத்தினூடாக மாற்றிய பின் பெறப்பட்ட அச்சுப்பிரதியை உரிய முறையில் ஒப்பமிடப்பட்டு பதிவுத் தபால்(Registered Post) மூலம், பிரதிச் செயலாளர், பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

உங்கள் பல்கலைக்கழக விண்ணப்பப் படிவத்தில் (First form) காணப்படும் உங்கள் கையொப்பமும் விருப்பொழுங்கை மாற்றுவதற்கான விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் உங்கள் கையொப்பமும் ஒரே மாதிரியானதாக இருத்தல் வேண்டும்.

இந்தக் கட்டத்தில் "UniCodes" விருப்ப வரிசையை மாற்றினால், உங்கள் முதல் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டிருந்த முழு விருப்பத்தேர்வு வரிசையும் இரத்துச் செய்யப்படும். அதற்குப் பதிலாக, நீங்கள் புதியதாக வழங்கிய "UniCodes" வரிசையின் அடிப்படையில் பல்கலைக்கழக சேர்க்கைக்கான தேர்வு இடம்பெறும். "UniCodes" விருப்ப வரிசையை கடிதம் (Letters), தொலைநகல் (Fax)> அல்லது மின்னஞ்சல் (Email) மூலம் மாற்றும் கோரிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பத்தினை இணையவழி மூலம் சமர்ப்பித்த பின் கற்றைநெறிகளின் அனுமதிக்கு தேவையான 'வெட்டுப்புள்ளிகள்" பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்றது. மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணையவழி மூலம் பதிவுசெய்து (Registration) கொள்வது கட்டாயத் தேவைப்பாடாகவுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதிவு செய்த மாணவர்களது உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்தே பல்கலைக்கழகங்கள் மாணவர்களிற்கு அனுமதி அளிக்கின்றது. ஏற்கனவே ஒரு பல்கலைக்கழகத்தில்ஃ உயர் கல்வி நிறுவனத்தில் கற்கை நெறிக்காக இலவச கல்விமுறையின்கீழ் உள்வாரி மாணவர்களாக ஒருமுறை பதிவு (Registration) செய்த மாணவர்கள், அடுத்த தடவை உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக கற்கை நெறி கிடைத்திருப்பினும் எக்காரணம் கொண்டும் அடுத்த ஆண்டுகளில் பல்கலைக்கழக தெரிவினூடாக உள்வாங்கப்படமாட்டார்கள்.

'தோல்வி என்பது வெற்றியின் முதற்படி' ஒருமுறை கிடைத்த பெறுபேறு உங்களின் முழுமையான திறமையை வெளிப்படுத்தவில்லை என நீங்கள் கருதினால், மீண்டும் ஒரு முயற்சி (Next Attempt). அடுத்த பரீட்சைக்குத் தயாராகுங்கள். கடந்த முறை எங்கே தவறு நடந்தது? என்பதை ஆராய்ந்து படிக்கத் தொடங்குங்கள். தற்போது உங்களிடம் அனுபவம் உள்ளது. அதை மூலதனமாகக் கொண்டு புதிய உத்வேகத்துடன் களம் இறங்குங்கள்.

விடாமுயற்சியுடன் உங்களுக்கு தரப்பட்ட மூன்று (3) சந்தர்ப்பங்களையும்; தவறாமல் பயன்படுத்தி உங்கள் பல்கலைக் கழகக் கனவை நனவாக்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 . 12 . 1942 |  | 20 . 04 . 2026 |

## சுப்பையா தவராசா

(இளைப்பாறிய உத்தியோகத்தர்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கந்தர்மடம், மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா தவராசா அவர்கள் கடந்த 20.04.2026 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தாவின் (கந்தர்மடம்) அன்புக் கணவரும், அமுதன் (பிரான்ஸ்), அமுதா (அம்மு- இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லா, முகுந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், புவிசனின் பேரனும், காலஞ்சென்றவர்களான நவராசா, சிவராசா மற்றும் லோகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2026) புதன்கிழமை முற் பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.16,
இந்துக்கல்லூரி வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 402 8689

(CS 61281) A

# மரண அறிவித்தல்

## கதிர்காமநாதன் விதுசன்

(3ம் வருட மாணவன், பொறியியற்பீட மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்)

தோற்றம் 02.03.2001 — மறைவு 19.04.2026



சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் விதுசன் கடந்த (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கதிர்காமநாதன் சிவாநந்தி தம்பதியரின் மற்றும் மாதினி கணபதிப்பிள்ளை அன்பு புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா - மற்றும் செல்லத்துரை (ஆயுள்வேத வைத்தியர்) சின்னத்தங்கம் ஆகியோரின் பேரனும், திருமாவளவன், வாகீசன், ஜெயமுகுந்தன் (சோக்குட்டி), இந்துமதி, அபிராமி, கதிர்காமதம்பி, ஞானேஸ்வரி, சிவமலர், ராஜேந்திரி ஆகியோரின் மருமகனும், சிவப்பிரியன், சங்கீதா, கர்ணி, ஹர்சி ஆகியோரின் சகோதரனும், நிலா சிவப்பிரியனின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2026) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்: குடும்பத்தினர்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
077 288 1492

(CS/61279) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை இராஜேந்திரம் (பத்தர்)

யாழ். வண்ணார் பண்ணை அரசடி பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக்வும் கொண்ட ஐயாத்துரை இராஜேந்திரம் அவர்கள் கடந்த (20.04.2026) திங்கட்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் அமரர் ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் ஏக புதல்வரும், அமரர் மதியாபரணம் - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், சூரியகுமாரியின் அன்பு கணவரும், விக்கினேஸ்வரி, சூரியகலா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொழும்பு), உதயகுமார் (டென்மார்க்), மோகனகலா (கணக்கீட்டு உதவியாளர் - இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்), கலாநிதி, அருட்செல்வி (முதுநிலை விரிவுரையாளர், யாழ் பல்கலைக் கழகம்), மனோகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் (மின்சார சபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநீதன் (பத்தர்), பாலகிருஷ்ணன் (ஓய்வு நிலை பொறியியலாளர் - திருகோணமலை), கிருபைராஜா (பொறியியலாளர் - யாழ்ப்பாணம்), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், அமரர் பாலசிங்கம், அமரர் லீலாவதி, ஈஸ்வரி (கொலண்ட்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், அமரர் நடேசு, அமரர் சண்முகம் ஆகியோரின் மைத்துனரும், கஜன், விஷ்ணுபிரியன் (ஆசிரியர் கொழும்பு). தெய்வீகன் (யாழ். இந்தக் கல்லூரி) மகதி, டனீஸ், வதீஸ் (பிரான்ஸ்), சுமணா (வீடமைப்பு அதிகார சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேரனும், அகீஷ், அகீஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2026) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 09.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 06.08.1940 — மறைவு 20.04.2026

525/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/61282) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவனை...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.
யாழ்ப்பாணம் மணற்காடு பகுதியில் உள்ள பாடசாலை யிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
இரண்டாம் தரத்தில் கல்விகற்றும் குறித்த மாணவனின் முகத்தில் காயம் இருந்ததை அவதானித்த ஆசிரியர், அது தொடர்பில் வினவியுள்ளார். இதன்போது, இயற்கை உபாதைக்காகச் சென்றபோது, மதிலில் இருந்த பாம்பு தனது முகத்தில் விழுந்ததாகவும், உடனடியாக உதறிவிட்டு வந்ததாகவும் அந்த மாணவன் கூறியுள்ளான்.
இதையடுத்து, அந்த மாணவன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு மேலதிக சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான். தற்போது அந்த மாணவன் நலமுடன் உள்ளான் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
(அ-ம-100)

## ஐரோப்பியக்...

நேரில் அவதானிப்பதற்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது. இதற்கு அமைய நேற்றையதினம் அவர்கள் புதைகுழியை அவதானிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும், நேற்றையதினம் ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் அவதானிப்புப் பணியில் ஈடுபடவில்லை. அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில், அகழ்வுப் பணிகள் ஆரம்பமான பின்னர் அவதானிப்புப் பணியில் ஈடுபடுவதற்கு ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
(அ-ம-26)


### மெசின் மைன்ரர் தேவை

கோட் (D). கோட் (S)
அச்சகத்திற்கு மெசின் மைன்ரர்
வேலையாட்கள் உடன் தேவை.
**077 39 65 214**

### வேலையாட்கள் தேவை

ஹோட்டல் ஒன்றுக்கு கொத்து, ரைஸ், ரொட்டி தயாரிப்பதற்கு ஆட்கள் தேவை.
விலாசம் : நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு:
**076 96 31 384**
(CR 47431)A

### நோயாளர் நலன்புரிச் சங்கம்- சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வருடாந்த பொதுக் கூட்டம்-2026

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் 10.05.2026 அன்று முற்பகல் 10.00 மணிக்கு வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 08.05.2026க்கு முன்னர் அவற்றை எமது அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்
செயலாளர்
(CR 47426)A

### குருக்கள் தேவை

**வண்.வடகிழக்கு கலட்டி**
**எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்**

எமது ஆலயத்திற்கு நிரந்தரக் குருக்கள் தேவை.
- விண்ணப்ப முடிவுத் திகதி : 25.04.2026
- நேர்முகத் தேர்வு : 26.04.2026 அன்று காலை 9 மணியிலிருந்து ஆலய மணி மண்டபத்தில் நடைபெறும்.
- வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு : உங்கள் சுயவிபரக் கோவையினை ஆலயக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்புகளுக்கு : செயலாளர்
077 379 5703
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
காரியாலயம் - 076 374 8880

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நண்ணீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.

**தொடர்பு:- 077 6234 204**
(CS 61283) A


### மரண அறிவித்தல்




**திருமதி திலகவதி சுப்பிரமணியம்**

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (21.04.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார், காலஞ்சென்ற சிவானந்தம் – அன்னம்மா தம்பதிகளின் செல்ல மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற முகாமையாளர்- மின்சார சபை, இலத்திரனியல் பொறியாளர் – அகில இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தினி, சுரேந்திரன், சுதர்ஷினி, சுரேஷ்குமார் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வெங்கடேசன் (பொறியியலாளர், துபாய்), டாக்டர் அபிராமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காவியா, சயந்தவி, ஹரண்யா, சிவசுரம்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவபாதம், சிவனடி, சிவநேசன் மற்றும் பத்மாவதி, புவனேஸ்வரி, மகேஸ்வரி, யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டாக்டர் தியாகராஜா (Past Centinial District Governor,PMJF, MAF) அவர்களின் அன்பு மைத்துனியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை (24.04.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் நொச்சிக்காமம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சுரேஷ்குமார் (மகன்)
0061 411 868 399
021 223 0264

இராஜபவனம்
இருபாலை கிழக்கு,
இருபாலை.
(CS 31646)A

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
22.12.1950

இறப்பு
23.03.2026

## அமரர் கார்த்தி கணேசு

எங்கள் அன்பின் தந்தையே
கார்த்திகை ஒளியில் காலனைக் கண்டதும்
அன்புச் செல்வங்களையும்
மனைவியையும் மறந்து
விடைபெற்றது ஏனோ?
ஏங்குகின்றோம் உங்கள் வதனம் கான...

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும்...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் எஸ்.லெனின் குமார் தலைமையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. கடந்த வழக்குத் தவணையின்போது, புதைகுழிப் பகுதி அகழ்வுக்கு ஏற்ற நிலையில் இருப்பதாக சட்டமருத்துவ அதிகாரியால் தெரிவிக்கப்பட்ட போதிலும், நிதி விடுவிக்கப்படாத நிலையில் அகழ்வு ஒத்திவைக்கப்பட்டது. எனினும், சில தினங்களுக்கு முன்னர் நிதி விடுவிப்பு அனுமதி வழங்கப்பட்ட நிலையிலேயே, எதிர்வரும் 27ஆம் திகதியன்று பணிகளை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 27ஆம் திகதி செம்மணிப் புதைகுழிப் பகுதியில் வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் இடம்பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது.
அகழ்வுப் பணிகள் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நீதவான நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. அகழ்வுப் பணிகளுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
வழக்கின் நேற்றைய விசாரணையின் போது, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா ஆகியோரும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வழிநடத்தலில் சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷானும், காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் சார்பில் சட்டத்தரணி பூரணி மரியநாயகமும் கலந்துகொண்டனர்.
(அ-ம-26)

## தனித்து...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையினர் தற்போது காத்திரமான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். அந்த முயற்சிக்கு சம்மதம் தெரிவித்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர், தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிக்கு புறம்பாக தற்போது 'ஈழத் தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை' என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்படுகின்றனர். இதை என்னவென்று கூறுவது?
தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் ஏற்கனவே உடன்பட்டு விட்டோம். அரசியலமைப்பு உருவாக்கத்துக்குச் சட்ட நுணுக்க அறிவாற்றல் தேவை. சட்டம் தெரிந்த சட்டத்தரணிகள் அதை கையாள்வது வரவேற்கத்தக்க விடயம். அதை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். எனவே, அத்தகைய முயற்சிகளை குழப்பும் வகையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் செயற்படக்கூடாது.
இதனைச் சுட்டிக்காட்டி தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கு 'உங்கள் நிலைப்பாடு என்ன?' என்பதை வெளிப்படுத்துமாறு கோரி கடிதம் ஒன்றை நாங்கள் எழுதியுள்ளோம். அவர்கள், 'நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம்' என்று கூறினால் நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம். எமக்கு தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையுடன் எந்தப் பிரச்சினையும் கிடையாது. அவர்களுடன் இணைந்து செயற்படுவதென நாங்கள் முடிவெடுத்துச் செயற்படும்போது, குழப்பம் உருவானால் அதனை தெளிவுபடுத்த வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது. அதைத்தான் நாங்கள் கோரியுள்ளோம். அவர்கள் வழங்கும் தெளிவுபடுத்தலின் அடிப்படையில் எமது முடிவு இருக்கும். முடியுமானவரை அவர்களுடன் இணைந்து செயற்படவே நாங்கள் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ-ம-26)

## இடமாற்றங்கள்...

அலுவலகத்துக்கு முன்பாக நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்ததாவது:-
வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கடிதங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரும் இதுவரை அந்த இடமாற்றங்கள் நடைமுறைக்கு வரவில்லை. இந்த விடயம் தொடர்பில் வடமாகாண கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்துக்குச் சென்று சில விடயங்களை முன்வைத்தோம். இதன்போது எமக்குத் தீர்வு வழங்குவதற்கு இருவார அவகாசம் கோரியிருந்தனர். எனினும், இன்றுவரை காத்திரமான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சேவையின் தேவைகருதியே எமது இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுச்சேவை ஆணைக்குழு உரிய பரிசீலனைகளை மேற்கொண்டு முடிவெடுத்த பின்னர், எமது இடமாற்றங்களை நிறுத்திவைப்பது ஏற்கத்தக்கது அல்ல. விரைவாக எமக்கான தீர்வு வழங்கப்படாத பட்சத்தில், இரவு பகலாக நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்-என்றனர். (அ-ம-21)

## கட்டைக்காடு...

இரவு கைது செய்யப்பட்டனர். கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் மீன்பிடித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிரான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் மூன்று மீனவர்கள் கட்டைக்காடு முள்ளியான் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் ஆழியவளைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து நான்கு படகுகள், வெளி இணைப்பு இயந்திரங்கள், 43 லீற்றர் மண்ணெண்ணெய், மின்கலங்கள், நீரில் மூழ்கிப் பயன்படுத்தக் கூடிய 11 மின் விளக்குகள், நங்கூரங்கள், 3 கைத்தொலைபேசிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.
(அ-ம-66)

## ஈழத்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியாவின் துணைக் குடியரசுத்தலைவர் இராதாகிருஷ்ணன் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார். எம்முடனான சந்திப்பின்போது ஈழத் தமிழர்களிடம் கட்சிகள் அதிகரித்துள்ளன என்றும், அவற்றை ஓரளவுக்கு ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கூறினார். எனதும், சிறீதரனதும் கைகளைப் பிடித்துக்கொண்டு இந்தக் கருத்துகளை அவர் முன்வைத்தார். இந்தக் கருத்துகளில் உள்ள ஆழமான விடயத்தை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
வீட்டுக்கு வீடு கட்சிகள் உருவாகி விட்டன. மாவட்டத்துக்கு மாவட்டம், மாகாணத்துக்கு மாகாணம் என பல கட்சிகள் இன்று செயற்பட்டு வருகின்றன. இது ஆரோக்கியமானது அல்ல. இந்திய துணைக்குடியரசுத் தலைவர் இத்தகைய கருத்தை முன்வைக்கின்றார் என்றால், அவருடைய கருத்துகளில் உள்ள ஆழத்தை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவருடனான சந்திப்பின் போது பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. சமஷ்டியே நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற விடயத்தை அழுத்தமாக நாங்கள் முன்வைத்துள்ளோம்-என்றார். (அ-ம-26)

## தமிழ்த்...

யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு மாற்றாக, தமிழ்த்தேசியப் பேரவையும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிக்கு தமிழ்த் தேசியப் பேரவை வலுவான ஒத்துழைப்பு வழங்கும் என்று நாங்கள் ஏற்கனவே கூறியிருந்தோம். ஆனால், தமிழ்த் தேசியப் பேரவையின் அங்கீகாரம் தொடர்பில் சந்தேகமான நிலைமைகள் உள்ளன. ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி மாலை தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் கலந்துரையாடல் நடைபெறவிருந்தது. ஆனால், அன்று காலைவரை எமது கட்சியின் சார்பில் எத்தனைபேர் பங்கெடுப்பது என்ற தெளிவான தகவல் எமக்குத் தரப்படவில்லை. அதன் பின்னரே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதற்கு அமைய மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக எமது பிரதிநிதிகள் முன்னிலையாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக பங்குபற்றும் போது, உரையாடப்படும் விடயங்களை வேறுசிலர் அவதானிக்கலாம் என்று சுமந்திரன் வெளிப்படுத்திய எதிர்ப்புக் காரணமாக எமது சார்பில் காண்டீபனைத் தவிர வேறு எவரும் பங்குபற்றவில்லை. அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.
திம்புக் கோட்பாட்டின் அம்சங்களை முற்றாக அனுபவிக்கக்கூடிய வகையில் தமிழர்களுக்கான தீர்வு அமைய வேண்டும். இதற்காக கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் நாங்கள் பொதுவான தீர்வு வரைவை முன்னெடுத்து வருகின்றோம். இதற்கு தமிழரசுக் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் விரும்பும் பட்சத்தில் தற்போதும்கூட அந்த முன்னெடுப்புகளில் இணையலாம். ஆனால், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கு மாற்றாகவே நாங்கள் செயற்படுகின்றோம் என்று கூறுவதும், குற்றஞ்சாட்டுவதும் அடிப்படை அற்ற விடயம்-என்றார். (அ-ம-26)

## ஐஸ்...

பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மூவரிடம் இருந்தும் 2 கிராம் 380 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில், அவர்கள் மூவரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (அ-ம-20)

## வெற்றுக்...

குறித்த வெற்றுக் காணியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பொதியொன்று காணப்படுகின்றது என, பொது மக்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கையின் அடிப்படையிலேயே இந்தக் கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-20)

## மரபணுப்...

பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில், நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வழிநடத்தலில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான், மரபணுப் பரிசோதனை தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.
அத்துடன் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் 'மரபணுப் பரிசோதனை வெளிநாட்டில் செய்யப்பட வேண்டும்' என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும், நீதியமைச்சர் கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு உள்நாட்டில் நிபுணர்கள் இல்லை என்று ஏற்றுக்கொண்டார் எனவும் சுட்டிக்காட்டினார்.
இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் மரபணுப் பரிசோதனையை யாழ்ப்பாணத்தில் செய்ய முடியுமா? அதற்கு நிபுணர்கள் உள்ளனரா? ஆய்வை வெளிநாடுகளில் செய்வதானால் எந்தெந்தப் பல்கலைக்கழகங்களில் செய்யமுடியும்? உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி எதிர்வரும் 27ஆம் திகதியன்று அறிக்கை வழங்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-26)

## வீதியைக்...

பரந்தன் கண்ணகிநகர் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். முதியவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# டெல்லியைத் தோற்கடித்து பலம்பெற்றது ஹைதராபாத்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியைத் தோற்கடித்து புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம் கண்டது ஹைதராபாத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி, அபிஷேக் சர்மாவின் அபார சதத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களையும், கிளாசன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், ஹெட் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ராணா 57 ஓட்டங்களையும், ரிஷ்வி 41 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)


## ஆங்கில பிரத்தியேக வகுப்புக்கள்

**Personal Classes** Gr-6 to A/L

ஆங்கில வகுப்புக்கள் தனியாகவோ குழுவாகவோ வந்து கற்பிக்கப்படும்.

- ✓ இலகுவான பயிற்சிகள் கதைப்பதற்கு (Spoken)
- ✓ கடந்தகால வினாத்தாள்கள் (Past Papers)
- ✓ இலக்கணம் (Grammer) (Book & Work Book)
- ✓ பாடசாலை தவணைப் பரீட்சை பயிற்சிகள்

தொடர்புக்கு:077 4805 182
Whatsapp:075 044 2050

ஆசிரியர் T.J.Justin

(CS 31644) A



## வேலையாட்கள் தேவை

யாழில் உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
(உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்).

- ➤ உணவு பரிமாறுபவர்கள் - 02 பேர்
- ➤ உணவு பொதி செய்பவர்கள் - 02 பேர்
- ➤ கிளீனர் - 01 பேர்

தொடர்புகளுக்கு:-
077 226 0997, 075 145 0713

(CS61271) J-1


## சர்வதேச மரபுரிமைநாள் உரை

யாழ்ப்பாணம், ஏப். 22

சர்வதேச மரபுரிமைநாளை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியற்துறை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு விசேட உரை இடம்பெறவுள்ளது.

'கத்தோலிக்க தமிழ்க் கிறிஸ்தவ ஆற்றுகை மரபுகளை முன்வைத்து, தொட்டுணர முடியாத மரபுரிமைகளைப் பாதுகாத்தலின் சவால்கள்' என்ற தொனிப்பொருளில் ஆற்றுகையாளரும் மற்றும் அரங்கக் கலைஞருமான ஜோன்சன் ராஜ்குமார் இந்த உரையை வழங்கவுள்ளார். (ம)

## அமெரிக்க இல்லாமல் தம்மைத் தற்காக்க நேட்டோ பரிசீலனை



நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என துருக்கி அறிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளை இனி அமெரிக்கா பாதுகாக்காது என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்திருந்தார். அத்துடன், நேட்டோ கூட்டணிக்கு எதிராகவும் அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார். இவ்வாறான நிலையிலேயே, அமெரிக்காவின் உதவி இல்லாமல் நேட்டோவினதும் ஐரோப்பாவினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று துருக்கி தெரிவித்துள்ளது.

நேட்டோவில் இருந்து அமெரிக்கா விலகினால், அது ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக் கட்டமைப்பில் பேரழிவை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், மாற்றுத்திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்க வேண்டியதும், அதற்குத் தயாராக இருக்கவேண்டியதும் அவசியம் என்று துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் ஹக்கான் பிடன் கூறியுள்ளார். அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல் ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் விரைவில் நேரில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர். பிரான்ஸின் தலைநகரான பரிஸில் இந்த மாநாடு நடைபெறச் சாத்தியம் உள்ளதாக நம்பப்படுகின்றது. (ம)


## சாயி பராமரிப்பு சேவை

உங்கள் தாய், தந்தையினரை வீட்டில் இருந்து பராமரிக்க வேண்டுமா?
உடனே அழையுங்கள் !
வீட்டிற்கே வந்து பராமரிக்க சிறப்பு சேவையினை வழங்குகின்றோம்.


தொடர்புகளுக்கு:- 077 500 5412

## பராமரிப்பாளர் தேவை

உங்களுக்கு பகுதி நேர வேலையாகவும், முழு நேர வேலையாகவும் பராமரிப்பு வேலை செய்ய அரிய வாய்ப்பு.
முதியோர் பராமரிப்பு

தொடர்புகளுக்கு:- 077 500 5412


## மரண அறிவித்தல்



### சுந்தரலிங்கம் கமலாம்பிகை

தையிட்டிப்புலம் வித்தகபுரத்தை பிறப்பிமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கமலாம்பிகை அவர்கள் கடந்த 20.04.2026 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் தியாகநாகலிங்கம் சுந்தரலிங்கம் (மட்டுவில்) அவர்களின் அன்பு மனைவியும், தையிட்டிபுலத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ர புத்திரியும், மட்டுவிலை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தியாகநாகலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகளும், சுகந்தன் (லண்டன்), சுகந்தினி, பவானி (நுவரெலியா), தியாகினி (லண்டன்), பாமினி (கொழும்பு), புருசோத்மன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரிமணியம், கமலேஸ்வரி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவ்வியா (லண்டன்), சுதர்ஷன், சிவகுமரன் (நுவரெலியா), ரவிக்குமார் (லண்டன்), சுகந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதீவ், வர்ணயா, சஞ்ஜனா, சஞ்யை, கவிசனா, திபிஷனா, விபிசனா, சாயித், நிதீஸ், டனீஸ், டர்விஸ், சமிதா, அபிசேக், விபின் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2026) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - 076 5499 309
மருமகன் - 077 7076 705

(CS 61273) A



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org